சிவமயம்

# குமரகுருபரன்

மலர் 26] மாசி மீ 1-ம் உ (13-2-75) [இதழ் 2



தனிப்பிரதி 45 பைசா வருடச் சந்தா ரூ. 5-00

த-3127

## ஆசிரியர் குழு.

1. திரு. Dr. K. சிவராமன் அவர்கள், M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.

2. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M.A., B.O.L.
ஓய்வுபெற்ற செந்தமிழ்க்கல்லூரி பிரின்ஸ்பால், திருப்பனந்தாள்

3. திரு, பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.,
ஓய்வுபெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.

4, திரு. டி. எச், விவேகானந்தம்பிள்ளை அவர்கள் [J. P.]
B. A. L. T. ஓய்வுபெற்ற அசிஸ்ட்டண்டு கமிஷனர், சென்னை–86

5. Dr. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A Phd.
அஞ்சல் வழிக்கல்வித்துறை, மதுரை பல்கலைக்கழகம். மதுரை–2

K. சுப்பிரமணிய பிள்ளை,
கௌரவ நிர்வாக ஆசிரியர்.

## உள்ளுறை

பக்கம்

1. அருள்மொழி அமுது ... 97
2. முருகன் பெருமை ... 101
3. சேக்கிழாரின் சொற்றிறம் ... 110
4. அலங்காரநாயகன்(8) ... 114
5, பக்தி ... 118
6. அறுமுகனின் அருள்மிகுதலங்கள் அறுபத்தாறு ... 124
7. இயற்கைக் கன்னி, இறைமைக் கன்னி! ... 128
8. குமரகுருபரனுக்கு வாழ்த்து ... 131
9. கீழ் உடையும் கொண்ட உருவம் ... 132
10. நான்கண்ட முருகன் ... 137
11. சங்க இலக்கிய கடவுள் வாழ்த்துப் பாக்களில் சிவபெருமானின் திருவுருவ அமைப்புகள் ... 140
12 மூன்றும் திருமுறையின் முதற்பாடல்கள் ... 68

T-UN-448

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை

# குமரகுருபரன்



மலர் 26 | ஆனந்த ௵ மாசி ௴ 1௳ [13-2-75] | இதழ் 2

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.
திருச்சிற்றம்பலம்

# அருள் மொழி அமுது

**திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,**
*3119, கீழ இரண்டாம் வீதி.*
**புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.**

## 19. கண்ணப்பும் நம்பெருமான்

எல்லா நூல்களாலும் பெருமையாகப் பேசப்பட்டதால் ''கலைமலிந்த'' என்று அடைமொழி கொண்ட இப்பெரியவர் பிறந்தது பொத்தப்பிநாடு என்பர். தனது கண்ணையே பொத்து இறைவனுக்கு அப்பியமையால் அவர் பிறந்த நாட்டிற்குப் பொத்தப்பிநாடு என்று பெயரிட்டனர் போலும்! ஒரு

நாட்டிற்கு அழகு சான்றோர்களால் போற்றப்படுவது. **"நாவலர் புகழ்ந்து போற்று நல்வளம் பெருகி நின்ற நாடு"** எனப் பொத்தப்பி நாட்டின் பெருமை கூறுகிறது அருள் மொழியாரின் திருவாக்கு. இதன் தலைநகரம் உடுப்பூர். கரிய மேனியும் அச்சம் அருள் இவையில்லாது வாழும் வேடர்களின் தலைவன் நாகன் என்பான் அந்நாட்டையாண்டான். நல்ல மகனையடைவதற்கான தவஞ்செய்தவராயினும், பிறப்பின் சார்பால் தகாத காரியம் செய்யும் வேடுவனானன். அவன் மனைவியின் பெயர் தத்தை. இருவரும் நல்லவர்களாயினும், வயது காரணமாக இவர்கட்கு மக்கட்பேறே கிடையாது என்று பிறர் கூறினர். சைவ முறையில் பிராணிகளை உயிரோடு கோயில்களுக்கு விட்டனர், **"வாரணச்சேவலோடு வரிமயிற் குலங்கள் விட்டு"** என்று கூறுவதன் மூலம் உயிர்ப் பலி கொடுக்கவில்லை என்பது குறிப்பிடப் பெறுகிறது. **"சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்"** என்ற பழமொழி யானது சஷ்டியில் விரதமிருந்தால் அகப்பையில் கருப்பம் ஏற்படும் என்ற செய்தியேயாகும் மக்கட் பேறளிக்கும் பெருமானான முருகனுக்கு அவனது ஊர்தியான மயிலையும் கொடியான சேவலையுமே உரிமைப் பொருளாகத் தந்தனர் என்பது குறிப்பு. **"சதாசிவோம்"** எனச் சிவபெருமானைப் பாடிய வேதம் **"சுப்ரமண்யோம்"** என மும்முறை கூறித் துதித்தது என்பர். அதையொட்டி **"புரங்கள் செற்ற எந்தை'** எனச் சிவபெருமானைக் கூறி, முருகப்பெருமானை மூன்று விதத்தில் கூறினர்.

> **பயில்வடுப் பொலிந்தயாக்கை வேடர்தம் பதியா நாகற்கு**
> **எயிலுடைப் புரங்கள் செற்ற எந்தையார் மைந்தரான**
> **[1]மயிலுடைக் கொற்ற வூர்தி: [2] வரையுரங்கிழித்ததிண்மை:**
> **[3]அயிலுடைத் தடக்கைவென்றி அண்ணலார் அருளினாலே.**

அப்படிபட்ட முருகப்பெருமானின் அருளால் தத்தைக்குக் கருப்பம் ஏற்பட்டது கூறினர். அது கண்டு மகிழ்ச்சி கொண்ட நாகன் உயிர்ப்பலி முதலானவை கொடுத்து, பத்து மாதங்கள் கழிய **"பான்மதி உவரி யீன்றுலெனமகப் பயந்த போது"** கடலிலிருந்து சந்திரன் தோன்றியது போல ஒரு குழந்தை அவதரித்தது. சந்திரன் பதினாறு கலைகளில் முழு

மதியாகிறது. அது போல் **இவரும் பதினறு வயதுடன் இறைவனையடைவார் என்பது தொனிக்க மதி எனக்குறித்தார்.** பதினறுக்கு மேல் மதிக்கு வளர்ச்சி கிடையாதன்ருே? மலை போன்ற கரிய நிறமுள்ள தந்தை, காளத்தி மலையிலிருந்த தன் அன்பு மழையால், உலகத்தை உய்விக்கும் மேகம் போன்ற குழந்தையை எடுத்துக் கொண்டான். நாகன் செய்த புண்ணிய மும் உலகஞ் செய்த புண்ணியமும் சேர்ந்து கனமாக, திண் ணென்றிருந்தமையால், குழந்தைக்கு திண்ணன் எனப் பெய ரிட்டனர். குழந்தை நன்கு வளர்ந்தது. ஒரு மிருகத்தைப் பிடிக்க அதன் இனத்திலொன்றை வைத்திருப்பார் வேடர். அதற்குப் பார்வை மிருகமெனப் பெயர். பார்வை மிருகமாக வைத்திருத்த புலியின் வாயில் சிறு குழந்தையான திண்ணனர் கையை நீட்ட, அன்புருவான தந்தை அவ்வாறு செய்யக் கூடாது என சிறு தழையைக் கொண்டு மிரட்ட, இறைவனுக் காகச் சமர்ப்பிக்கப் போகும் இருகண்களிலும் முத்துப் போல் கண்ணீர் வர, தாய் முத்தமிட்டு ஆறுதல் கூறி கண்ணிலிருந்து வந்த முத்துப் போன்ற நீரை மாற்றினள்

> **பொருபுலிப் பார்வைப் பேழ்வாய் முழையெனப் பொற்கை நீட்டப்**
> **பரிவுடைத் தந்தை கண்டுபைந்தழை கைக்கொணடோச்ச**
> **இருச்சுடர்க் குறுகண் தீர்க்கும் எழில்வளர் கண்ணீர் மல்கி**
> **வருதுளி முத்தம் அத்தாய் வாய்முத்தங் கொள்ளமாற்றி,**

எனத் திண்ணனரின் பாலலீலை கூறப்படுகின்றது. திண்ண னருக்கு பன்னிரண்டு வயதானவுடன் வில்வித்தை கற்பிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்தான் தந்தையான நாகன். ஐந்து வயதில் கல்விபுகட்ட ஆரம்பிக்கின்ருேம். வில்வித்தை வேடர் கட்கு முக்யமானதால் உடல் வலிமை ஏற்பட ஆரம் பிக்கும் பன்னிரண்டு ஆண்டில் ஏற்பாடு செய்தனர் போலும். கல்வி கற்பிக்க ''அட்சராப்பியாசம்'' என எழுத்துக்களைச் சொல்லிக் கொடுப்பது போல, வில்வித்தையில் முதன்முத லாக ''வில்லைக் கைப் பிடித்தலே'' சடங்கு. சிலைக்குப் புலி நரம்பினல் காப்புக் கட்டியது போல, திண்ணரின் கைக்கும் அதே புலி நரம்பினல் காப்புக் கட்டினர். மேருமலை தான் சிவபெருமான் திருக்கரத்திலுள்ள வில். அதை மத்தாகக் கொண்டு தேவர்கள் பால் கடல் கடைந்த காலத்து அது

சிவபெருமானுக்கு நஞ்சையளித்தது, அதே வில்லை திண்ணனாரின் கையில் எடுத்துள்ளார். இது காட்டிலுள்ள மிருகங்களை வேட்டையாடி இறைவனுக்கு அமுதளிக்கப் போகின்றது.

**பான்மையிற் சமைத்துக் கொண்டு படைக்கலம் வினை ஞரேந்தத்**
**தேனலர் கொன்றையார் தந்திருச்சிலைச் செம்பொனமேரு**
**வானது கடலினஞ்ச மாக்கிட அவர்க்கே பின்னும**
**கானவூனமு தமாக்கும் சிலையினைக் காபபுச் செயதார்**

எனத் திண்ணனாரின் வில் சிறப்பிக்கப்படுகின்றது. வேடர்கள் விழாக்கொண்டாடி, விருந்துண்டு. நகர்வலம் வந்து, ஏழாவது நாள் மத்யானம் உச்சிப்பொழுதில் (சூரியோதயத்திற்கு முன்னரும், சூரியன் உச்சிசேர்ந்த காலத்தும், சூரியன் மறைந்த மாலை நேரமும் நல்லநேரமென்பது பெரியோர் வழக்கு) வில்லைத் திண்ணனார் பிடிக்கச் செய்தனர். வெகுவிரைவாக வில்வித்தை பயின்றார் திண்ணனார். "**முற்றக் கற்றனன் என்னையாளும் கானவர்க்கரிய சிங்கம்**" என்னையாளும் என்ற சொல்லினை திண்ணனாருக்கும் ஞானசம்பந்தருக்கும் மட்டுமே சேக்கிழார் பெருமான் கூறியுள்ளார் என்பது நினைவு கூறுதல் மிகமிக அவசியம், படிக்காத ஒருவரையும் மிகப்படித்தவரையும் சேர்த்து ஒன்றாக எண்ணியது இம்மாபெரும் புலவரின் திருவுளம். கானவர்க்கரியவர் கானவர் குலத்தில் வந்தார் என்பது குறிப்பு. திண்ணனாருக்குப் பதினாறு வயதாயிற்று. முழுமதியென வளர்ந்து விட்டார். ஞானசம்பந்தரும் மார்க்கண்டேயரும் பதினாறண்டில் இறைவனையடைந்தது நினைவுகூர வேண்டியதொன்றும். இதே நிலையைத் திண்ணனாரும் அடைந்துள்ளார்.

இது இவ்வாறாக, நாகனுக்கு மூப்புப் பருவம் வந்தது. பயிருக்கும் உயிருக்கும் கெடுதல் செய்யும் மிருகங்களை வேட்டையாடும் வழக்கமுடைய நாகன், தன் குடிமக்களை நோக்கி "முன்போல் எனக்கு உடலில் பலமில்லை." எனவே என் மகனை திண்ணனை உங்களுக்கு அரசனாக ஏற்றுக் கொள்ளுங்கள்" எனக் கூற, அவர்களும் "உன்காவலில் இதுவரை நன்கு வாழ்ந்தோம். இனியும் நீ காட்டும் வழியே நடப்போம். எங்

**(தொடர்ச்சி அடுத்த பக்கம்)**

# முருகன் பெருமை

திருமுறைக் கலைஞர்
திரு, வித்துவான்; தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர்கள்
திருச்சிராப்பள்ளி-2

முருகனே! செந்தி முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே! – ஒருகை முகன்
தம்பியே! நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான். –பதினோராம் திருமுறை.

**தோற்றுவாய்:**

முருகன் – அழகுடையவன்; (முருகு + அன் = முருகன்) முருகு–இளமை, அழகு, இனிமை, தெய்வத் தன்மை முதலிய பல பொருள் குறிக்கும் ஒரு சொல். ஆகவே, முருகன் என்பது என்றும் ஒரே தன்மையான இளமையழகும் தெய்வத்தன்மை நலங்கள் பலவும் ஒருங்குடையவன் என்பதாம். இதனை,

**''என்றும், இணையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே**
**உனையாய் என் உள்ளத்(து) உறை''**

என்றார் ஒரு பெரியார்.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

களுக்கு அரசனாக திண்ணனையும் பெற்றளித்தாய். அவருக்கே அரசுரிமையைக் கொடுக்கலாமே'' என மகிழ்வுடன் கூறினர்.

**''இத்தனை காலமும் நினது சிலைக்கீழ்த்தங்கி இனிதுண்டு தீங்கின்றி**
**யிருந்தோம்' இன்னும்**
**அத்த! நினதருள் வழியே நிற்பதல்லால் அடுத்தநெறி வேறுளதோ?**
**அதுவேயன்றி**
**மெய்த்தவிறல் திண்ணனையுள் மரபில் சாலமேம்படவே பெற்றளித்தாய்.**
**விளங்கு மேன்மை**
**வைத்த சிலைமைந்தனை ஈண்டழைத்து நுங்கள் வரையாட்சி அருள்''**
**என்றார் மகிழ்ந்து வேடர்**

(தொடரும்)

"சீர்க்கும ரேசன் கொண்ட திருப்பெரு
வடிவம் தன்னில்
ஏர்க்குறும் ஒளியும் சீரும் இளமையும்
எழிலும எல்லாம்
ஆர்க்குள? உலகில் அம்மா!......"

என்பது கந்தபுராணம்.

முருகக் கடவுளின் பெருமை கடல் போல விரிந்து நிற்பது. அதனை அறிய எண்ணுவது கடலின் ஆழத்தை அளப்பது போலாம்.

"நின் அளந் தறிதல் மன்னுயிர்க்கு அருமை"

என்பது திருமுருகாற்றுப்படை ஆயினும்,

"பெருமை பெறு நினதுபுகழ் பேச வேண்டும்"

என்பது இராமலிங்க அடிகளார் அருட்பா,

**முருகக் கடவுள் வழிபாட்டின் தொன்மை:**

இவ்வுலகத்திலே நானிலப்பகுப்புத் தோன்றிய போதே, பண்டைத் தமிழ் மக்கள் மலையும் அதனைச் சார்ந்த இடமுமான குறிஞ்சி நிலப்பகுதிக்கு முருகனைத் தெய்வமாக வைத்துக் கொண்டாடினர். குறிஞ்சி நிலத்திற்கு முருகனைத் தெய்வமாகத் தொல்காப்பியரும் "சேயோன் மேய மைவரை உலகம்" என்று கூறிப்போந்தார். மலைக்குரியவன் முருகன் ஆதலால் அவனை மலையாண்டி எனவும், பழனியாண்டி எனவும் அழைக்கலாயினர்.

தமிழ் நாட்டின் வடஎல்லையான வேங்கட மலையில் ஆதியில் எழுந்தருளிய முருகக் கடவுளை மக்கள் வழிபட்டு வந்ததாகத் தெரிகிறது. அதன் நினைவாக மக்களில் சிலர் தம் மக்களுக்கு "வேங்கட சுப்பிரமணியன்" என்ற பெயரைச் சூட்டி அழைத்தனர் என்பது வெளிப்படை.

ஆகவே, முருகன் வழிபாடு சுமார் 6000 ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியது என்னலாம்.

**முருகப் பெருமானின் தோற்றம்:**

"பெம்மான் முருகன் பிறவான் இறவான்" ஊரிலான் குணம் குறியிலான், பேரிலான் ஆகிய பரம் பொருள். 'உள்கு

வார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்பவன்' உயிர்க்குயிராய் விளங்குபவன். தேவர்கள் துயர் தீர்க்கும் பொருட்டு எழுந் தருளிய சிவமூர்த்தியே கருணை நிறைந்த ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு திருக்கரங்களும் அமைந்த திருமேனி கொண்டு முருகன் என வந்து தோன்றினன்.

> **''அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்ருய்ப்**
> **பிர மமாய் நின்றசோதி பிழம்பதோர் மேனியாகக்**
> **கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே**
> **ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய''**
> **– கந்தபுராணம்.**

முருகப் பெருமான் திருவடிவம், உதிரம், என்பு, சுக்கிலம் மூளை, தசை, நரம்பு, தோல் என்ற எழுவகைத் தாதுக்களைக் கொண்ட நமது கருமகாரண உடல் போலன்றி மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்ற ஆறு அத்து வாக்களின் தொகுப்பால் அமைந்த தெய்வீக வடிவு ஆகும்.

முருகக் கடவுளின் திருவடிவில் 11–மந்திரங்களைக் கொண்ட **மந்திராத்துவா** இரத்தமாகவும், 81–பதங்களைக் கொண்ட **பதாத்துவா** முடி(சிரசு) ஆகவும், 51. வன்னங்களை (எழுத்துக்களை)க் கொண்ட **வன்னுத்துவா** தோலாகவும், 224-புவனங்களைத் கொண்ட **புவனுத்துவா** உரோமங்களாக வும், 36–தத்துவங்களைக் கொண்ட **தத்துவாத்துவா** சுக்கிலம், மூளை, நரம்பு, என்பு, தசை என்ற தாதுக்களாகவும், 5–கலை களைக் கொண்ட **கலாத்துவா** சகல உறுப்புகளாகவும் அமைந்து விளங்கும்.

இவற்றுள் பதம், வன்னம் மந்திரம் என்ற இம்மூன்றும் சொல்வடிவாகிய சக்தி, புவனம், தத்துவம், கலை என்ற இம் மூன்றும் பொருள் வடிவாகிய சிவம். ஆகவே **சிவசக்தி வடிவமே** முருகக் கடவுள் வடிவம் ஆகும்.

**முருகனும் சிவனும் வேறு அல்லர்:**

சிவபெருமான் தம்மை வழிபடும் அன்பர்களுக்குப் பற்பல பேறுகளை அருளும் பொருட்டே கொண்டருளும் திருவுருவங் களுள் முருகன் திருவுருவமும் ஒன்ரும். மரமும் அதன்

வைரமும் போல் சிவபெருமானும் முருகப் பெருமானும் வேறு அல்லர் ஆகவே "சிவனே குகன்: குகனே சிவன்"

"மறைகளின் முடிவால் வாக்கால்
மனத்தினால் அளக்கொணாமல்
நிறையுடன் யாண்டு மாகி
நின்றிடும் நிமலமூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி ..."
"ஈசனே அவன் ஆடலால் மதலை ஆயினன்"

– கந்தபுராணம்.

"தனக்குத் தானே மகனாகிய தத்துவன்"

– தணிகைபுராணம்.

சிவபெருமானின் நெற்றிக் கண்களினின்று தோன்றிய தீப் பொறிகள் ஆறும் சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகளாகத் தாமரை மலர்களின் மேல் விளையாடிக் கொண்டிருந்த போது, சிவபெருமான் உமாதேவியாரோடு சரவணப் பொய்கையினை அடைந்து உமாதேவியை நோக்கி அங்குத் தாமரை மலர்களின் மீது வீற்றிருக்கும் முருகனாகிய குழந்தைகளைச் சுட்டிக் காட்டி.

"(ஆதலின்) நமது சத்தி அறுமுகன்
அவனும் யாமும்
பேதகம் அன்றால்; நம்போல் பிரிவிலன்;
யாண்டும் நின்றான்;
ஏதமில் குழவி போல்வான்; யாவையும்
உணர்ந்தான்; சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு
அருள வல்லான்"

– கந்தபுராணம்.

என்று கூறியருளினார்.

**முருகக் கடவுளின் ஆறு திருமுகங்கள்:**

சிவபெருமானின் ஈசானம். தற்புருடம், அகோரம், வாமதேவம். சத்தியோசாதம் என்னும் ஐந்து திருமுகங்களோடு சிற்சத்தியாகிய சிவசத்தியின் அதோ முகம் (கீழ்நோக்கிய திருமுகம்) ஒன்றும் சேர்ந்து ஆறு திருமுகங்களாகி அவற்றின் நெற்றிக் கண்களில் தோன்றிய ஆறு தீப்பொறிகளின் திருவுருவமே, சிவசொரூபமே ஆறுமுகக் கடவுள். ஆறு

முகங்களைக் கொண்டு விளங்குபவர். ஆதலால் அவர்க்குச் சிவபெருமானின் **சர்வஞ்ஞத்துவம்** (முற்றறிவு). **பரிபூரணத்துவம்** (எங்கும் நிறைந்து நிற்றல்) **அநாதிபோதம்** (இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல்) **அலுப்தசக்தி** (பேரருள் உடைமை) **சுதந்தரத்துவம்** (தன்வயத்தனுதல்), **அநந்தசக்தி** (முடிவிலாற்றல் உடைமை) என்ற மேலான ஆறு குணங்களும் (சுத்த சாட்டுன்யமும்) ஆறு திருமுகங்களாய் அமைந்தனவாம்.

> ''ஏவர்தம் பாலு மின்றி எல்லைநீர் அமலற் குள்ள
> மூவிரு குணனும் சேய்க்கு முகங்களாய் வந்ததென்ன''

என்பது **கந்தபுராணம்.**

வியட்டிப் பிரணவமாகிய **அ, உ, ம், நாதம், விந்து, சக்தி** என்ற ஆறும் முருகனின் திருமுகங்களாகவும், பிரணவம் (அ+உ=ஓ. அ+உ+ம்=ஓம்) ஒன்றும். திருவைந்தெழுத்து (**சி வ ய ந ம**) ஐந்தும் ஆக ஆறும் சண்முகக் கடவுளின் திருமுகங்களாகவும் அமைந்தன எனப் புராணங்கள் கூறுகின்றன

இவையே அல்லாமல், கணபதியை ஓங்கார வடிவில் வழிபடும் **காணுபத்தியம்**, குமரனைப் பேரின்ப வடிவினனுக வருபடும் **கௌமாரம்**, சூரியனைப் பேரொளி வடிவினனுக வழிபடும் **சௌரம்**, விஷ்ணுவை எங்கும் நிறைந்தவனுக வழிபடும் **வைணவம்**, சக்தியைத் தாயாக வழிபடும் **சாக்தேயம்**, சிவனைத் தந்தையாக வழிபடும் **சைவம்** என்ற இந்த ஆறு வைதிக சமயத்தின் ஆறு தெய்வங்களின் கூட்டே முருகப் பெருமானின் ஆறு திருமுகங்களாகவும் அமைந்தன என நூல் கூறும்.

> ''ஆறுசமயக் கடவுள் வேறு வேறின்றி யான்
> ஒருவனே அங்கங் கிருந்து
> அன்பர்க்கு முத்திதரு வித்தென்று யாவர்க்கும்
> அறிவித்த வதன மணியே''!
>
> – போரூர் பிள்ளைத்தமிழ்' சிறுபறை)

இம்முகங்கள் ஆறும் கருணை பொழிமுகங்கள் ஆகும். ஆகவே அம்முகங்கள் உயிர்களுக்குக் கருணை பொழிவதால், ''மூவிரு முகங்கள் போற்றி; முகம்பொழி கருணை போற்றி'' என்று **கச்சியப்ப சிவாசாரியர்** புகழ்ந்து பேசுகின்றுர்.

முருகக் கடவுளின் ஆறு திருமுகங்களும் நிகழ்த்தும் செயல்களைத்திருமுருகாற்றுப்படை ஆசிரியர்–நக்கீரர்.

1. ஒருமுகம் உலகிற்கு ஒளியை அளிக்கின்றது.
2. ஒருமுகம் அன்பர்களுக்கு வேண்டிய வரங்களை வழங்குகின்றது.
3. ஒருமுகம் அந்தணர் வேள்வியினைப் பாதுகாக்கின்றது.
4. ஒருமுகம் முனிவர்களுக்கு நூற்பொருளை விளக்குகின்றது.
5. ஒருமுகம் அசுரர்களை அழித்துக் கனவேள்வி செய்கின்றது.
6. ஒருமுகம் உலகில் இல்வாழ்க்கை நிகழும் பொருட்டு வள்ளியம்மையாருடன் நகைத்து விளையாடுகின்றது.

என்று அழகுபடக் கூறுகின்றார்.

அருணகிரிநாதர் தம் திருப்புகழில் திருமுகங்களின் செயலை வேறுவகையாகக் கூறுகின்றார்.

> **''ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே**
> **ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே**
> **கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே**
> **குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே**
> **மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே**
> **வள்ளியை மணம்புணர வந்தமுகங் ஒன்றே**
> **ஆறுமுகம் ஆனபொருள் நீயருள வேண்டும்**
> **ஆதி அருணசலம் அமர்ந்த பெருமானே''**

**முருகனுடைய கண்கள்:**

ஆறுமுகக் கடவுளின் ஒவ்வொரு முகத்தினும் இரண்டு இரண்டு கண்கள் உள்ளன. இதனை **''பன்னிரண்டு கண்ணுடைய** பிள்ளை தோன்றும்'' எனவரும் அப்பர் சுவாமிகள் திருப்பூவனத் தேவாரத்தில் காணலாம்.

திருவாமாத்தூர் தண்டபாணி சுவாமிகள், சண்முகக் கடவுளுக்கு ஒவ்வொரு முகத்திலும் நெற்றிக் கண்ணுடன் மூன்றாகப் **பதினெட்டு கண்கள்** உள்ளன என்று கூறுகின்றார்.

"கந்தக் கடம்பமலர் மார்பா!............
கண்கள்அறு மூன்றுடை யானே!கருணைக்கடலே ..... ."
– கௌமாரவிஜயம்.

**முருகன் தம் பன்னிருகையில் ஏந்திய படைக்கலங்கள்;**

முருகப் பெருமான் தம் திருக்கரங்களில் ஏந்திய படைக் கலங்கள் எல்லாம் பற்பல தெய்வங்கள் அளித்த மிக்க சக்தி வாய்ந்த படைக்கலங்கள் ஆகும். அவை, ஒவ்வொன்றும் ஒவ்வொருவர்களின் தியானத்தில் பற்பல விதமாகத் தோன்றிச் சென்று வெற்றியுடன் திரும்பும் வல்லமை உடையது.

இவையே அல்லாமல் சிவபெருமான், பதினொரு உருத் திரர்களை அழைத்து "நீங்கள் முருகன் திருக்கரங்களில் படைக் கலங்களாக இருக்கக்கடவீர்" என்று கூறியபடி, பதினொரு உருத்திரர்களும் தோமரம் (எறியீட்டி), கொடி, வாள், வச்சிரம், அம்பு, அங்குசம், மணி (கண்டாமணி) தாமரை (தாமரை வடிவினதாகிய ஒருவகை ஆயுதம்) வில், மழு(பரசு) தண்டம் என்னு ஆயுதங்களாக ஆகி முருகக் கடவுள் திருக் கரங்களில் வந்து அமர்ந்தனர்.

இன்னும் சில கடவுளரின் சூலம், கேடயம், சக்கரம் முதலியனவும் முருகக் கடவுள் ஏந்தியுள்ளார்.

சிறப்பாக முருகப் பெருமான் தம் வலப்பக்கத் திருக் கரங்கள் ஆறில் கொடி, வச்சிரம், அங்குசம், அம்பு, வேல், அபயமும், இடப்பக்கத் திருக்கரங்கள் ஆறில் வரதம், தாமரை, மணி, மழு தண்டம், வில்லும் ஆகிய இவற்றைத் தாங்கி விளங்குகின்றார்.

"வீறு கேதனம் வச்சிரம் அங்குசம் விசிகம்
மாறி லாதவேல் அபயமே வலமிடம் வரதம்
ஏறு பங்கயம் மணிமழுத் தண்டுவில் இசைந்த
ஆறி ரண்டுகை அறுமுகம் கொண்டுவேள் அடைந்தான்"
– கந்தபுராணம்-சயந்தன் கனவு காண்படலம்,

"பன்னிரு கமல பாணியும் அவற்றின்
சூலமும் வேலும் துரோணமும் சரமும்
பாலமும் குலிசமும் பரிசையும் வாளும்
ஆழியும் மழுவும் அபயமும் வரதமும்" –செந்தூர் அகவல்

**முருகக் கடவுளின் (சக்தி) வேற்படை:**

முருகப் பெருமான் தமது திருக்கரத்தில் ஏந்திய வேல் **சக்திவேல்** (ஞான சக்திவேல்) சிவபெருமான் படைத்தது. அது திருமால் கையில் தாங்கிய சக்கரம் போலவும், சிவ பெருமான் கையில் பிடித்த சூலம் போலவும் அன்று. வேத சிவாகமங்கள் புகழும் தெய்வத்து உருவம் எல்லாம் அமைந்து பெரும் சக்தியுடன் நிகழ்வது.

இவ்வேற்படை (வேலாயுதம்) ஐம்பெரும் பூதங்களை அழிக்க வல்லது; எல்லா உயிர்களையும் ஒருங்கே முடிக்க வல்லது; எத்தகையோராயினும் அவருடைய வன்மைகளையும் வரங்களையும் கெடுத்து உயிரைப் போக்கவல்லது; எவ்வெப் படைகளுக்கும் தலைமை வாய்ந்தது.

**(ஆயதற் பின்னர்) ஏவில்மூ தண்டத்து**
**ஐம்பெரும் பூதமும் அடுவது**
**ஏயபல் லுயிரும் ஒருதலை முடிப்பது;**
**ஏவர்மேல் விடுக்கினும் அவர்தம்**
**மாயிரும் திறலும் வரங்களுஞ் சிந்தி**
**மன்னுயிர் உண்பதுஎப் படைக்கும்**
**நாயக மாவது; ஒருதனிச் சுடரவேல்**
**(நல்கியே மதலைக்குக் கொடுத்தான்)** – கந்தபுராணம்

இந்த ஒரு தனிச் சுடர்வேல், கதிர்வேல், இரத்தினவேல், மாணிக்கவேல், தங்கவேல், வச்சிரவேல், சிங்காரவேல், வெற்றி வேல் முதலிய திருநாமங்களைப் பெற்று விளங்குவது.

**''தோகைமேல் உலவும் கந்தன்**
**சுடர்க் கரத்தில் இருக்கும் வெற்றி**
**வாகையே சுமக்கும் வேலை**
**வணங்குவது எமக்கு வேலை''** – செவ்வந்திபுராணம்

**முருகக் கடவுளின் ஊர்தி, கொடி:**

ஆறுமுகக் கடவுளின் ஊர்தி (வாகனம்) நாரதர் செய்த வேள்வியில் தோன்றிய **ஆட்டுக்கிடா**, இந்திரனாகிய **மயில்**, சூரபன்பனின் பாதியுடலாகிய **மயில்**, தேவலோகத்துப் **பிணிமுகம்** என்ற யானை ஆகிய இவையேயாம்.

இந்திரனாகிய மயில் வலப்பக்கம் தலையும் இடப்பக்கம் தோகையும், சூரபன்மனாகிய மயில் இடப்பக்கம் தலையும் வலப் பக்கம் தோகையும் இருக்க முருகன் ஊர்வதாகும்.

திருக்கயிலையில் ஐராவணம் என்ற யானை‡ சிவபெருமானுக்கு ஊர்தியாக உள்ளது போல் முருகப் பெருமானுக்குப் பிணிமுகம் என்ற யானை ஊர்தியாகும்.

முகத்தில் முகபடாம் நெற்றிப் பட்டம், கொம்புகளிலே பூண்கள், கால்களில் சலங்கைகள் முதலியன பிணிக்கப் படாமல் இயல்பாகவே யாவும் அமைந்த தெய்வீக யானை பிணிமுகம் எனப் பெயர் பெறுவது.

மயிலும் யானையும் பிரணவ (ஓம்) வடிவம். முருகக் கடவுள் மயில் மீது எழுந்தருளி அதன் தோகைக்குள் அடங்கி நடுவே வீற்றிருக்கும் காட்சி பிரணவத்தின் மத்தியில் இருப்பதையும், யானை மீது எழுந்தருளியிருக்கும் காட்சி, பிரணவத்தின் உள்ளும் புறமும் வீற்றிருப்பதையும் குறிப்பித்து நிற்கும்.

**"ஓங்காரத் துட்பொருளாய் நின்றான் கண்டாய்"**

– அப்பர் தேவாரம்.

———

(தொடரும்)

‡ ஐராவணம்-இஃது இரண்டாயிரம் கொம்புகளுடைய யானை. (ஐராவதம்-இது நானகு கொம்புகளையுடைய தேவலோகத்து யானை இந்திரனின் யானை) "அயிரா வணமேறாது ஆனேறு எறி அமரர் நாடாளாதே ஆரூர் ஆண்ட" என்பது அப்பர் தேவாரம்.

# "சேக்கிழாரின் சொற்றிறம்"

திரு. புலவர். தெ. முருகசாமி பி, ஓ. எல் அவர்கள்
இராமசாமி தமிழ்க்கல்லூரி, (விரிவுரையாளர்)
காரைக்குடி-1

---

(மலர் 25 583ம் பக்கத் தொடர்ச்சி)

மெய்ப்பொருள் நாயனுர் தம்மிடம் வந்த அடியவர் தமக்குத் துன்பத்தை உண்டாக்கிய பிறகும்கூட அவருக்கு உதவ வேண்டி அவரைக் கொல்லவந்த தம் காவலனுகிய தத்தனைத் "தத்தா நமர்" என்று கூறித் தடுத்தார். வந்த அடியவரின் செயலை அறிந்து வந்தவன் முத்த நாதன்தான் என்பதை ஒருவாறு மெய்ப்பொருளார் அறிந்திருக்கக் கூடும். அங்ஙனமே அறிந்தாராயினும் அவர் தாம் யாது செய்ய இயலும்? ஏனெனில் "மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் எனத் தொழுது வென்ருர்" என்று சேக்கிழார் கூறுவதால் அவ்வேடத்தையே கடவுளாகக் கருதிவிட்ட பிறகு அவ்வேடத்தில் வந்து தம்மை யார் எது செய்யினும் அது அவ்வேடத்தின் மூலப் பொருளாக விளங்கும் ஆண்டவனின் திருவருட்பேறே எனக் கருதித் தொழுதாரேயன்றி வேறேதும் செய்வாரல்லர் எனத் தெரிகின்றது. எனவே பொய்யான முத்தநாதனும் மனித வடிவத்தை அவர் வணங்காமல் அவன் போர்த்தி வந்த ஆண்டவனுக்குச் சமமான தவ வேடத்தை வணங்கியதென் பது ஆண்டவனை வணங்கியதற்குச் சமமானதால் மெய்ப் பொருளார் வென்றவரானுர்.

"மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்" எனத்தேற்றேகாரம் தந்து கூறுவது மெய்ப்பொருளுக்குச் சமமான அவ் வேடத்தின் தனிச் சிறப்பைச் சுட்டுவதற்காகும். "வேடமே தொழுது வென்ருர்" எனத் தெளிவாகவும் உறுதியாகவும் ஏகாரத்திற்கு ஏற்றம் தந்து கூறுவதிலிருந்து அவ்வேடம் வேறு அவ்வேடத்தைத் தரித்தவன் வேறு என்று தெற்றெனத் தெரிகின்றது.

ஒருவர் செய்த தீமை இன்னொருவரால் சுட்டப்படாமலேயே உலகம் அறிந்து கொள்ளும். ஆனுல் ஒருவர் செய்த

நன்மை அஃது செய்தவராலன்றி இன்னொருவரால் சுட்டப் படும் அளவில்தான் உலகம் அறிந்து கொள்ள முடியும். இஃது உலக இயல்பு. இவ்வுண்மையை நன்குணர்ந்த சேக்கிழார் மெய்ப்பொருள் நாயனுரின் போர் வெற்றியைக் குறிப்பாகக் காட்டிப் பின்னர்த் தொழுது வென்றதை வெளிப்படையாக விளம்பரப்படுத்தினுர் எனலாம்.

இங்ஙனம் மேற்கண்டவாறு 'தொழுது வென்ருர்' என்று கூறுவதற்குச் சேக்கிழார் மெய்ப்பொருளாரின் கதைப் போக் கிற்கியைய ஓர்இன்றியமையாத சொல்லமைப்பை உருவாக்கிக் கொண்டார் என்று கருதலாம். அதாவது முத்தநாதன் மெய்ப் பொருள் நாயனுரைப் போரினுலன்றி வஞ்சனையால் வெல்ல நினைத்த அவனது நிலையை உணர்த்தவந்த கவிஞர் "அற்றத்தில் வெல்வானுகச் செப்பரு நிலைமையெண்ணித் திருக்கோவலூரிற் சேர்வான்" என்று முன்னர் கூறிய "வெல்வானுக" என்ற சொல்லமைப்பிற் கொப்பப் பின்னர் "தொழுது வென்ருர்" என்று கூறினுர் எனச் சிந்திப்பதேயாகும்

ஈண்டு "வெல்வானுக" என்றது வஞ்சனையால் வெல் வான் வேண்டி என்று பொருள்படும். மேலும் "வஞ்சனையால் வெல்பவனைப் போல" என்ற பொருளும் தருவதாக உள்ளது. இவ்விரு பொருள்களில் 'வஞ்சனையால் வெல்பவனைப் போல" என்ற பொருளே சிறப்பாக உள்ளது. உண்மையில் அவன் வெற்றி பெறப் போவதில்லை என்பதால் அவன் வெல் பவனைப் போல வந்தானேயன்றி உண்மையில் வெல்ல வரவில்லை. ஏனெனில் கதையின் பின் விளைவாலும் ஒருவாறு உய்த்துணரக் கிடப்பதால் அவன் வெல்ல வராமல் வெல்ப வனைப் போல வந்தான் எனக் கொள்வது பொருந்துவதாகும். மேலும் 'வெல்பவனைப் போல வந்தான்' என்பதிலுள்ள சிறு ஐயம் 'வெல்ல வந்தான்' என்பதில் இல்லை என்பதால் "வருபவன் வெல்லப் போவதில்லை" எனத் தெளிவாகத் தெரிகின்றது.

வாய்மையை வஞ்சனைவெல்லாது என்பதும் வஞ்சனையை வாய்மை வெல்லும் என்பதும் மெய்ப்பொருள் நாயனுரின் புராணமையக் கருத்தாகும்.

**''இன்னுசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நல்நயம் செய்து விடல்''**

என்ற குறட்பாவிற்கியைய நாயனுர், வஞ்சகம் செய்த முத்த நாதனுக்கு நல்நயம் செய்தாரெனில் அது, வந்தவனின் வஞ்ச கத்தை வென்றதாகக் கருதப்படுவதோடு வந்தவனையும் வென்றதாகக் கருதப்படும். முத்தநாதன் தன்னளவில் தான் வென்றதாகக் கருதிக் கொள்ளலாமேயன்றி உண்மையில் அங்ஙனம் வென்றதாகக் கருத இயலாது.

எனவே வெல்லமாட்டாதவனை 'வெல்பவனைப் போல' எனக் குறிப்பாக முன்னர் சுட்டியதற் கொப்ப. பின்னர் மன்னராகிய மெய்ப்பொருளாரே வென்ருராதலின் முத்த நாதனுக்குச் சுட்டிய அதே சொல்லின் பொருளை மாற்றி ''வென்ருர்'' என்று சேக்கிழார் கூறினுர் எனில் அது மெய்ப் பொருள் நாயனுரின் வெற்றியைச் சிந்தித்த அளவில் எழுந்த கவிஞரின் சொல்லோ வியமன்ருே! இங்ஙனம் மெய்ப்பொருள் நாயனுரின் அரசியல் வாழ்க்கையில் ஏற்பட்ட சாதனை அவரின் ஆன்மீக வாழ்விற்குச் சோதனையாக அமைந்தது எனலாம். அதனுல் அவர் இறைமாட்சியிலும் வென்ருர்; இறைப் பற்றிலும் வென்ருர்.

வஞ்சனையால் அல்லாமல் உண்மையான போரினுல் நாயனுரை முத்தநாதன் வென்றிருப்பானுயின் அவன் தான் பெற்ற வெற்றி மிகுதியால் நாயனுரின் சேதி நாட்டை ஆள வேண்டிய பல செயல் திறங்களில் ஈடுபட்டிருப்பான். ஆனுல் மறைந்தொழுகி வந்து வஞ்சித்ததால் அது நீதியொடுபட்ட வெற்றியாகாது போயிற்று. அதை அவன் ஒப்புக் கொண் டவனைப் போல காணப்பட்டான். அஃதெவ்வாறெனில் அவன் மெய்ப்பொருளாரைத் துன்புறுத்திய பின்னர் அவனிடமிருந்து ஒரு சொல்லும் செயலும் வெளிப்படவில்லை என்பதே அவனது தோல்வியை அவன் ஒப்புக் கொண்டதற்குரிய அடையாளங்களாக அமைந்து விட்டன.

**''வஞ்ச மனத்தான படிற்ருெழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகததே நகும்''**

என்ற வள்ளுவத்தின்படி (அவனின்) முத்தநாதனின் சொல் லற்ற செயலற்ற மௌனநிலை அவனுடைய கயமைக்

குணத்தையும் வெற்றியின்மையையும் தெளிவாகக் காட்டுவதால் அவனது உண்மையான தோல்வியைப்பற்றி இலக்கியத்தில் வெளிப்படையாகச் சுட்டப்படாமலேயே வெளிப்படுத்தப்படுகின்றது.

இங்ஙனம் முத்தநாதனின் உண்மையான தோல்வியைச் சேக்கிழார் குறிப்பாகச் சுட்டியுரைப்பதற்குக் காரணம் என்னவெனில் முத்தநாதனைப் போன்றோரின் வஞ்சித் தொழுகும் வேடிக்கை வாழ்க்கையை வெறுப்பதோடு அவ்வஞ்சித்த தோல்வியாகிய அத்தீமையையும் தம் வாயினுற் கூறப் பண்பினர் அல்லர் என்பதைச் சேக்கிழார் தாமே வெளிப்படுத்திக் காட்ட அங்ஙனம் சுட்டியுரைத்தார் எனலாம். எனவே போரில் ஏற்பட்ட தோல்வியைக் குறிப்பாகவும் வஞ்சனையால் ஏற்பட்ட தோல்வியைக் வெளிப்படையாகவும் சுட்டியுரைக்க வேண்டிய கவிஞர் மறுதலைப்பட்டு போரில் ஏற்பட்டதை வெளிப்படையாகவும் வஞ்சனையால் ஏற்பட்டதைக் குறிப்பாகவும் சுட்டினுர் என்பதாம்.

மேற்கண்டவாறு கவிஞர் மறுதலைப்பட்டு உரைப்பதிலிருந்து ஓர் உண்மை வெளிப்படுகின்றது. அதாவது மனித வாழ்க்கையில் புறத்தில் காணப்படும் வெற்றி தோல்விகளை விட அகத்தில் உண்டாகும். வெற்றி தோல்விகளை இன்றியமையாதது என்றும் அங்ஙனம் அகத்தால் பெறும் தோல்வி மனிதனுக்குக் களங்கத்தை உண்டாக்கும் ஆதலால் வெற்றி வாழ்க்கை வாழ மனதைப் பண்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதும் கதையின் மூலம் தெரிகிறது. எனவே வாழ்வில் உண்டாகும் உண்மையான வெற்றி எது என்பதை மெய்ப்பொருள் நாயனுர் தம் செயல்மூலம் காட்டியதற்கொப்ப சேக்கிழார் ''தொழுது வென்ருர்'' என்று தம் சொல்லால் விளக்கினுர், எனில் அது சேக்கிழாரின் சொல் திறத்தை நீள நினைந்து இன்புறுதற்கோர் உரைகல்லாகுமன்ருே!

---

# அலங்கார நாயகன் 8

திருமதி ஆர். பார்வதி அம்மாள் அவர்கள்,
தமிழாசிரியை. நாமக்கல்.

## தினைப்புனம்

அருணகிரியார் சென்ற பாட்டில் இளம் பருவத் திருவிளையாடல்களைச் சொன்னார். குழந்தைப் பருவத்திற்கு அடுத்தது குமரப்பருவம். அவனைக் குமரனாக இந்தப் பாட்டில் பாடுகிறார். குமரனாகிய முருகன் ஒரு கன்னியைக் காதலித்த திருவிளையாடல்களைக் கூறுகிறார்.

**''பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல்
காக்கின்ற பேதை கொங்கை
விரும்பும் குமரனை''**

எனத் துவங்குகிறது பாட்டு. அவன் குமரன், பெரும்பைப் புனத்தினுட் சிற்றேனல் காக்கின்ற பேதையை விரும்பிச் சென்றான். வள்ளி வாழ்ந்த புனம் எப்படி இருக்கிறது. பச்சைப் பசேல் என்று தினைப்பயிர் விளைந்த கொல்லை அது. அங்கே வள்ளியம்மை சிற்றேனல் காக்கின்றாள். ஏனல் என்றால் தினை என்பது பொருள். சிறிய தினையைக் காக்கின்றாள். உயர்வு பெறாமல் உள்ள புன்செய்ப் பயிரான சிறிய தினைப் பயிரை வள்ளியம்மை காத்துக் கொண்டிருக்கிறாள். அவள் எத்தகையவள்? பேதை, அறியாமையை உடையவள். அந்தப் பெரிய காட்டில் மிகச் சிறியதான தினையைக் காக்கிறாள். சிற்றேனல் தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் உணவு ஆதலால் அதனைக் கிளி, குருவி முதலியவை கொத்திக் கொண்டு போகாமல் இருக்க ஆலோலம்பாடி அவற்றைத் துரத்திக் கொல்லையைக் காவல் செய்து வருகிறாள். அப்படிக் காப்பாற்றுவதையே தன் வாழ்க்கை செயல் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாள். திருமணம் புரிந்து கொண்டு கணவன்

வீடு செல்கின்ற வரைக்கும், குற மகளிர்களின் வேலை தினைப் புனம் காவல் புரிவது. இதன் உள்ளுறையைக் காண்போம்.

மனித வாழ்க்கையில் ஆன்மாக்களாகிய உயிர்கள் இன்றைக்கு என்ன காரியம் செய்துக் கொண்டிருக்கிறதோ அதையே வள்ளியம்மை செய்கிறுள். இந்த உலகம் விரிந்திருக்கிறது. உயிர்கள் எல்லாம் உடம்பைப் பெற்று பொறிகளின் வாயிலாக இன்ப துன்பங்களை நுகர்ந்து திரும்பத் திரும்ப இறந்தும் பிறந்தும் வருவதற்கு நிலைக்களமாக இந்த விரிந்த உலகம் அமைந்திருக்கிறது. உலகத்தில் விளைகின்ற பொருள்களை அனுபவித்துக் காத்து அவற்றைத் தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் உரிய பொருளாகவே வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆன்மாக்கள் காவல் புரிகின்ற பெரிய கொல்லையாக ஆண்டவன் இந்த பூமியை அமைத்திருக்கிறுர்.

மலைச் சாரலில் உள்ள நிலத்தில் அதிக உழைப்பு இல்லாத தினைப் பயிரையும் விளைவிக்கலாம். அருவியிலே வருகின்ற தண்ணீரைத் தேக்கிப் பாய்ச்சி நன்செய்ப் பயிரான நெல்லையும் விளைவிக்கலாம், பேதைப் பெண்ணுன வள்ளி எப்படி அந்தப் பெரிய காட்டில் மிகவும் சின்னத் தினையைக் காத்துக் கொண்டிருக்கிறுளோ, அதைப் போலவே இந்த அகன்ற உலகத்தில் அறியாமையை உடைய உயிர்கள் சிற்றின்பத்தையே அனுபவித்துக் காத்துக் கொண்டிருக்கின்றன. அந்த மலைச் சாரலில் உள்ள நிலத்தில் சக்தி உடையவர்கள் உழைப்பு உடையவர்கள் நன்செய்ப் பயிரான நெல்லைப் பாடுபட்டு உற்பத்தி செய்வது போல இந்த விரிந்த உலகத்தில் அருட் செல்வர்கள் சிற்றின்பம் அல்லாத எல்லையில்லாத பேரின்பத்தைத் தம் உழைப்பினுல் விளைத்து இன்பத்தை அடைவார்கள். பணக்காரர்கள் புசிப்பது நெல், ஏழைகள் புசிப்பது தினை, அருட்செல்வர்கள் நுகர்வது பேரின்பம், அருள் இல்லாத ஏழைகள் அனுபவிப்பது சிற்றின்பம், சிற்றின்பத்தைக் கிஞ்சித் போகம் என்றும், பேரின்பத்தை மகா போகம் என்றும் சொல்வார்கள்.

**''யான்என தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்''**

என்று வள்ளுவர் சொல்கிறார் செருக்கை அறுப்பதற்கு நிலைக் களமாக இருக்கும் இடம் இவ்வுலகம். உலகத்திற்கு வருகிற வர்கள் செருக்கைப் போக்கிக் கொள்ளலாம் செருக்கைப் பெருக்கியும் கொள்ளலாம்.

வள்ளியைப் பேதை என்று சொல்ல ஒரு காரணம் உண்டு. உண்மையில் அவள் குறச் சாதியைச் சேர்ந்தவள் அல்ல. அவள் திருமாலின் மகள், முருகனுக்கு வாழ்க்கைப் பட வேண்டிய உரிமை உடையவள். அவள் குற மக்களுக்கு மத்தியில் வந்து வளர்கிறாள். தான் யார் என்பதை அறிந்துக் கொள்ளாமல் வாழ்ந்துக் கொண்டிருக்கிறாள் தினைப்புனம் காத்துக் கொண்டிருக்கிறாள்.

ஆன்மா இறைவனோடு ஒட்டி வாழ வேண்டியது. ஆனால் அது உலகத்தில் பிறந்து அறியாமையில் சிக்கி பாசத்தில் கட்டுப்பட்டு சிற்றேனல் காக்கின்ற பேதைப் பெண் வள்ளியைப் போல் சிற்றின்பத்திற்காக முயன்று அதைநுகர்ந் துக் கொண்டிருக்கிறது. சிறையில் அகப்பட்ட கைதி அத னையே தன் வீடாகக் கருதி சிறையில் உள்ள மற்ற கைதி களோடு உறவு கொண்டாடி வாழ்ந்து வருவதைப் போல, இந்த உலகமாகிய சிறையில் அடைக்கப்பட்ட உயிர்கள் தம்மைப் போலவே இந்தச் சிறையாகிற உலகத்திற்கு வரு கின்ற மற்ற உயிர்களோடு உறவு முறை கொண்டாடி வாழ் கின்றன. தம்முடைய சொந்த வீடு எது என்பதை உணரா மல் இருக்கின்றன. தினைப்புனத்தில் வள்ளியெம்பெருமாட்டி வாழ்ந்த வாழ்க்கையைத் தான் ஆன்மாக்கள் இந்த உலகத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றன.

வள்ளிக்கு வாழ்வளிக்க முருகன் எப்போது வந்தான்? அந்தக் குறமாது தங்களுடைய குலதெய்வமாகிய முருகனைக் கொஞ்சம் நினைத்தாள், நினைத்தவுடன் அவளுக்கு வாழ்வு அளிக்க ஓடி வந்து விட்டான்.

**''பேதை கொங்கை விரும்பும் குமரனை''**

பருவம் வந்தவுடனே ஆண்டவன் ஓடி வந்தான். அவ ளிடம் தான் இன்பத்தை அடைய விரும்பி வந்தவனைப்போல ஓடி வந்தான் இதுதான் பெரியவர்களுடைய தன்மை. யாருக் காவது அவர்கள் உதவி செய்ய நினைத்தால் ஏதாவது சிறு வேலையை அவர்களுக்குக் கொடுத்துவிட்டு அதற்கு ஈடு செய்

வது போல பன் மடங்கு உதவி செய்வார்கள். முருகனும் அப்படியே செய்தான்.

அடுத்த இரண்டடிகளில் அருணகிரியார் உயிருக்கு அவன் எப்படி வாழ்வு அளிக்கிறுன் என்பதைச் சொல்கிறுர்.

**மெய்யன்பினுல்**
**மெல்லமெல்ல உன்ன**
**அரும்புந் தனிப்பர மானந்தம்**
**தித்தித் தறிந்த அன்றே''**

சிற்றேனல் காக்கின்ற பேதை கொங்கை விரும்புங் குமரனே மெல்ல மெல்ல உன்ன வேண்டும். மெய்யன்பினுல் மெதுவாக மெதுவாக நினைக்க வேண்டும் தியானம் செய்ய வேண்டும் அப்படி தியானித்தால் இன்பம் உண்டாகும், அவனே இதயம் ஒன்றி மெல்ல மெல்ல உன்னினுல் ஆனந்தம் அரும்பும், பரமானந்தம் அரும்பும், தனிப்பரமானந்தம் அரும்பும், தனக்கு மேல் இல்லாத மிக உயர்ந்த ஆனந்தம் அது, இறைவனே மெல்ல மெல்ல உன்னுவதால் அரும்பும். கரும்பும், தேனும் ஐந்து பொறிகளாலும் அடைகின்ற இன்பங்களுக்கு அடையாளமாக- இருக்கின்றன. கரும்பு ஒருவனது முயற்சியால் விளேந்து இன்பம் கொடுக்கிறது. தேன் முயற்சி இல்லாமல் விளேந்து இன்பம் தருகிறது. மனிதன் தன் முயற்சியால் பெறும் இன்பம் ஒருவகை. பண்டைத் தவத்தின் பயனுக அடையும் இன்பம் மறுவகை, அரும்பும் தனிப் பரமானந்தம் ஒரு துளி சுவைத்தாலும் போதும், பிறகு கரும்பும் துவர்த்து செங்தேனும் புளித்து அறவே கைத்துப்போய் விடும். ஐந்து இந்திரியங்களால் அனுபவிக்கும் இன்பம் யாவும் நமக்கு துவர்த்து, புளித்து, கைத்துப் போய்விடும் என்பது இதன் குறிப்பு.

வள்ளியெம் பெருமாட்டியின் வாழ்வை நமக்கு வழி காட்டியாக வைத்து இந்தத் தத்துவத்தை அருணகிரியார் இந்தப் பாட்டிலே சொல்கிறுர்.

**''பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல்**
**காக்கின்ற பேதை கொங்கை**
**விரும்பும் குமரனே மெய்யனபி**
**னுல்மெல்ல மெல்ல உன்ன**
**அரும்பும் தனிப்பர மானந்தம்**
**தித்தித் தறிந்த அன்றே**
**கரும்பும் துவர்த்துசெங் தேனும்**
**புளித்தறக் கைத்ததுவே''**

# பக்தி

திரு: மு. இளையதம்பி B. A. அவர்கள்,
18A, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

-O-

உயிர்களிடத்து இயல்பாய் அமைந்துள்ள பெருங்குணங்களில், அன்பு சிறந்ததாகும். அவ்வன்பு நாளடைவில் பக்தியாய் மாறுகின்றது. பெற்ரேர், குரு, தெய்வம், என்போர் மீது ஒருவன் செலுத்தும் அன்பு அவனை மேன்நிலைஅடையச் செய்கிறது. கண்ணுற் காணப்படும் தெய்வம் போன்றவரே பெற்ரேராகும். அவர்கள் பிள்ளைகள் மீது செலுத்தும் அன்பும் தியாகமும், பிள்ளைகள் அவர்களிடத்துப் பக்தியுடையவர்களாக வளரத் துணையாய் இருக்கின்றன. அறிவு வளர்வதற்கு உதவி செய்யும் குருவிடத்து மாணவர்கள் என்றும் பக்தியுடையவர்களாகக் காணப்பட வேண்டும். ஆன்ம ஈடேற்றற்கு என்றுந் தோன்ருத் துணையாயிருக்கும் இறைவன் மீது நாம் காட்டும் பக்தியே தலைசிறந்ததெனலாம்.

ஆன்மாக்களிடத்து இயல்பாகக் காணப்படும் அன்பு உயிர்க்கு ஒளியாய் நிற்கும் சிற்சக்தி எனப்படும். இவ்அன்பை இறைவனிடத்துச் செலுத்திஞல் அது பக்தி எனப்படும். ஆஞல் அவ்அன்பை உலக ஆசைகளிற் திருப்பி விட்டால் நாம் உலகபந்தத்துக்கு ஆளாகி விடுவோம். துன்பத்துக்கும் பிறப்புக்கும் ஆசையே காரணமாகும். பண்படாத மனம் உலக ஆசைகளுக்கு அடிமையாகிறது. பண்பட்ட மனம் இறைவனுக்கு அடிமையாகிறது.

பேரானந்தப் பெருவாழ்வை விரும்பி நிற்கும் உயிர்கள் தெய்வத்திலேயே தங்களுடைய பக்தியைச் செலுத்த விரும்பி நிற்பர். ஒருவன் மலரிட்டு இறைவனை வணங்குவான். தோத்திரங்களைப் பாடிப் பணிவாருண்டு, இயமம் நியமம் என்ற

ஒழுக்க நெறியினின்று வழிபடுபவர்கள் உண்டு. எல்லா உயிர்கள் மீதும் அன்பு காட்டி அகிம்சாவிரதத்தை மேற்கொண்டு ஒழுகுபவர்கள் உண்டு. சிவாலய வழிபாடு சிவதொண்டரை உபசரித்தல் ஆகியவற்றில் தினமும் ஈடுபட்டு வாழ்பவர்களும் உண்டு. இவ்வித ஒழுக்கங்களினின்று வழுவாது நடந்துகொள்வது இறைவன் மீதுள்ள பக்திக்கு அறிகுறியாகும். அறுபத்து மூன்று நாயன்மார்களும் சிவபெருமான் மீது அவர்களுக்குள்ள அளவு கடந்த பக்தியின் மூலமே இரண்டறக் கலந்தனர். ஒருவன் பக்தியுடையவனுக ஒழுகிவரத் தவறினுல் அவன் பிறந்திறந்து உழலநேரிடும்.

"பிரபஞ்சமென்னுஞ் சேற்றைக்கழிய வழிவிட்டவா" என்று கூறும் அருணகிரிநாதர் அருளிய,

> "பக்தியால் யானுனைப் பலகாலும்
> பற்றியே மாதிருப் புகழ்பாடி
> முத்தனு மாறென்னைப் பெருவாழ்வில்
> முக்தியே சேர்வதற் கருள்வாயே.

என்ற திருப்புகழ் முக்திப் பேறுஎய்த வேண்டின் முருகனுடைய புகழைப் பாடிப் பக்தி செய்ய வேண்டும் என்பதைக் கூறுகிறது. முக்தியை அடைவது, சீவன் முத்தருக்கே உரிய பேருகும். திருவருள் ஆன்மாவிற் படியும் அந்நிலை இறைவனுடைய புகழை இடையருது பாடிபணிபவர்க்குக் கிடைக்கும் இறைவன் மீது பக்தி செலுத்துபவர்க்குப் பரகதி கிடைக்கும் என்ற உண்மை திருவாசகத்தின் மூலம் புலப்படுகிறது.

> "முத்தனே முதல்வாமுக் கணுமுனிவா
> மொட்டரு மலர்பறித் திறைஞ்சி
> பக்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
> பரகதி கொடுத்தருள் செய்யுஞ்
> சித்தனே செல்வத் திருப்பெருந் துறையில்
> செழுமலர்க் குருந்த மேவியசீர்
> அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
> அதெந்துவே என்றருளாயே.

பக்தியுடன் அர்ச்சித்துத் தொழுபவர்க்குச் சிவபதம் அளித்து இறைவன் அருளைப் பாலிக்கின்ருன் என்பதும், அடியவர்கள் இறைஞ்சி வழிபட்டால் அபயம் அளிப்பான் என்பதையும் அறிகின்ரேம்.

உலகப் பற்றை நீக்குவதற்கு இறைபக்தி ஒன்றே துணை யாகும். ''ஆசைக் கயிற்றிலாடும் பம்பரம்'' என்று உலக மாந்தரின் நிலையைப் பட்டினத்தடிகள் அழகாகச் சொல்லு கின்றார். கொடுக்கப்பட்ட விசையானது குறையுமளவும் பம்பரம் ஆடிக் கொண்டே நிற்பது போல ஆசையானது ஒருவரின் மனத்துள்ளே புகுந்து விட்டால் அதைப் பெற்றுக் கொள்ளுமளவும் மனமானது அமைதியற்றிருக்கும். உபாய நிலையினின்று இறைவன் மீது பக்தி செலுத்துபவர்களுக்கும் ''வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்'' என்பதற் கிணங்க கேட்பவற்றைக் கடவுள் கொடுக்கின்றார். மயக்க அறிவுடைய மாந்தர் உலகப் பொருள்கள் யாவும் இன்ப துன்பங்களை மாறிமாறிக் கொடுக்கும் என்பதைச் சிந்தியாது மேலும் மேலும் அவ்விதப் பொருட்களையே விரும்புகின்றனர். ஆனால் பேரின்பத்தை நல்கும் திருவருளை இறைஞ்சிநிற்பவர் கள் மிகக் குறைவு, இது பற்றியே பட்டினத்தடிகள்,

**''பொன்னை நினைந்து வெகுவாகத் தேடுவர் பூவையன்னாள்**
***தன்னை நினைந்து வெகுவாய் உருகுவர் தாரணியில்***
**உன்னை நினைந் திங் ஙனைப் பூசியாத உலுத்த ரெலலாம்**
**என்னை இருந்து கண்டாய் இறைவாகச்சியே கம்பனே''**

என்று உலகமாந்தரின் உண்மையான மனநிலையை எடுத்தியம் புகின்றார். ஆனால் உண்மை நிலையில் நின்று அவனருளை விரும்புவோர் உலகத்தில் ஒரு சிலராகும். மணிவாசகப் பெரு மான், ''மானேயுன்னருள் பெறுநாள் என்றென்றே வருந் துவனே'' என்று கூறுவது நோக்கற்பாலது. ஆசையால் பக்தி செய்து நிற்பதும் அவரவர் பக்குவ நிலைக்கு ஏற்றதாகும். பாவஞ் செய்தோரும் மனங்கசிந்துருகி அழுதால் இறைவ னுடைய கருணை கிடைக்கும். 'என்பெலாம் நெக்குடைய ரோமஞ் சிலிர்ப்ப உடலிளக மனம் அழலின் மெழுகாய் இடையறுதுருகவரு மழை போலிரங்கியே இருவிழிகள் நீரிறைப்ப'' என்று தாயுமான சுவாமிகள் கூறுவதை நாம் கவனிக்க வேண்டும்.

நித்திய பேரானந்தத்தைப் பெறுவதற்குப் பக்திமார்க்கம் சிறந்த ஒரு வழியாக விளங்குகிறது. மனத்திலே தோன்று கின்ற சந்தேக விபரீத மயக்கங்கள் ஆகிய அலைகள் இறை ல

னுடைய இன்பக் கடலில் மூழ்குவதனாலே தெளிவு அடையும் இதுபற்றியே அருணகிரியார்.

''பத்தித்துறை யிழிந்தா நந்தவாரி படிவதனால்
புத்தித்தரங் கந்தெளிவ தென்றோ பொங்கு வெங்குருதி
மெத்திக் குறிகொள்ள வெஞ்சூரனை விட்ட சுட்டியிலே
குத்தித் தரங்கொண்ட மராவதி கொண்ட கொற்றவனே''

என்று கூறுகின்றார். பக்தி வழியைக் கடைப் பிடித்தொழுகினால் இன்பக் கடலில் மூழ்கலாம். பிறவியின் நோக்கத்தையும் அடைய அது உதவியாயிருக்கின்றது. பக்தி செய்வதாலேயே ஆன்மாக்களுக்கு இறைவன் பேரின்பத்தை அளிக்கின்றான்.

சமய குரவர்கள் இறைவன் மீது அன்பும் பக்தியும் உடையவராக என்றும் காணப்பட்டார். அவர்கள் நினைக்கும் போதெல்லாம் அருளைப்பாலித்துக் கொண்டிருந்தார், சுந்தரர் தேவாரத்தின் மூலம் இறைவன் மீது அவருக்கு இருந்த பக்தியும் அன்பும் எத்தன்மையதென அறியலாம்.

''எங்கேனும் இருந்துன் அடியேன் உனை நினைந்தால்
அங்கே வந்தென் னொடும் உடனாகி நின்றருளி,
இங்கே என்வினையை அறுத்திட் டெனையாளும்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே''

அடியவனாகிய சுந்தரருக்குத் தம்பிரான் தோழனாகக் காணப் பட்டார். மனம், வாக்குக்கு அப்பாற்பட்ட இறைவன் பக்தி செய்யும் அடியவர்களுக்கு அகப்படுவான் என்பதை,

''சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க
சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க
பக்தி வலையிற் படுவோ ான் காண்க''

என்ற மணிவாசகர் திருவாக்கிலிருந்து அறியலாம். மீன் ஆமை முதலியன வீசப்பட்ட வலைகளிற் தாமே வந்து சிக்குண்டு இருக்கும். அதனால் அவை வலைஞனுக்குச் சுலபமாக அகப்படுகின்றன. ''இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன், இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே'' என்று சொல்லப்படுகின்ற ஈசன் **பக்தியாகிய வலை** யொன்றிலேயே அகப்படுகின்றான், காமம் வெகுளி மயக்கம் ஆகிய அகக்குற்றங்களையும், புறப்பற்றுக்களையும் நீக்கி இறைவன் பால் பக்தி

செலுத்த வல்லவர்களுடைய அகத்திலே இறைவன் தோன்று வான். பக்குவ நிலையினின்று பக்தி செலுத்துபவர்க்கு இகபர சுகம் கிடைப்பது திண்ணம். பக்தன் அழுதால் உடனே அருளைப் பாலிப்பான். ''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' என்று சம்பந்தரும் ''நெஞ்சக்கனகல் நெகிழ்ந்துருக தஞ் சத்தருள் சண்முகனுக்'' என்று அருணகிரியார் கூறுவதை யுங் கவனிக்கலாம்.

கல்வி அறிவு, சமய அறிவு, தியானம், யோகம், ஆகிய வற்றைப் பயின்று கொள்ளாத ஒருவன் இறைவனிடத்துத் தஞ்சம் புகுந்து தன்னுலாவது ஒன்றுமில்லை. என்பதை உணர்ந்து இறைவனிடத்துத் தொடர்ந்து பக்தி செலுத்து வானுகில் அவனுக்கு இறைவனருள் கிட்டும். மூடபக்தி என்ருலுஞ் சரி அறிவைக் கொண்டு செலுத்தும் பக்தியெனரு லுஞ்சரி. மனந்தளராத பக்தியும், நம்பிக்கையும் உடையோ ருக்கு இறைவன் துணையாய் இருக்கின்ருன். அவ்விதம் பக்தியுடையோர் தம்முடைய வாழ்க்கையில் அவ்வுண்மையை அறியக்கூடும். பக்தி செய்யவல்லார் பெற்றுக் கொள்ளக் கூடிய நன்மையை யோக சுவாமிகள் திருப்பாடல் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

**''பக்திசெய்து பந்தத்தை நீக்கினேன்**
**பக்திசெய்து பரமனைக் கண்டேன்**
**பக்திசெய்யும் பாக்கியம் பெற்றேன்**
**பக்திகடலில் படிந் திருந்தேனே.**

எங்களைப் பீடித்திருக்கும் வினையானது பக்தியினுலே நீங்கும், அளவு கடந்த பக்தியினுலே பரமனையுங் காணலாம். அவ னருளாலே அவன்ருள் வணங்கி என்றதற்கிணங்கப் பக்தி செய்யக்கூடிய பாக்கியத்தையும் அவனே நல்க வேண்டும். பக்தியானது ஆளமற்ற நீரையுடைய தடாகம் அல்லது ஆறு என்பவைக்கு உவமிக்கப்படாது. ஆளமுள்ள கடலுக்கே உவமூனமாகக் கூறப்பட்டிருக்கிறது. கடலிற்தான் முற்ருக மூழ்கலாம் ஆகையால் பக்தியாகிய கடலிலே மூழ்க முடிந் தோருக்கு முத்தி கிட்டும் என்பதை விளக்கும் அவருடைய இன்னெரு திருப்பாடல் மூலம் அறியலாம்.

''சிவபக்திபோலே சிந்தை குவிந்தது
சிவபக்தியாலே சிந்தை தெளிந்தது
சிவபக்தியாலே சிந்தை இறந்தது
சிவபக்தியாலே சீவன் முக்தியே''

சிந்தையை ஒடுங்கச் செய்வதும் பின்னர் தெளிவு அடையச் செய்வதும். சிந்தை தன் செயலற்றுப் போவதற்கும், சீவன் முத்தன் நிலையை அடைவதற்கும் சிவனிடத்துச் செய்யும் பக்தியே துணையாக இருக்கின்றதென்பதை இப்பாடலின் மூலம் அறியலாம்.

பக்தி செய்ய அருளைப் புரிபவனும் இறைவனாகும், பக்தியினால் நாமடையும் பலனையும் அவனே நல்கின்றான். பலவிதமாகப் பெறும் சித்தியும் அவனேயாகும். சித்தர்களாய் விளங்குகின்றவர்களுக்கு அவ்வல்லமையைக் கொடுக்கின்றவனும், பக்குவநிலை எய்தியவர்களுக்கு முக்தியும், அம்முக்திக்குரிய முதல்வனும் அவனேயாகும். உலக உபாயங்களை விட்டு நீங்குதற்குரிய புத்தியை அளிப்பவனும் இறைவனாகும். ஆதலால் என்னாற் செய்யக் கூடியது உலகத்தில் யாதேனுமொன்று உளதாவெனத் தாயுமான சுவாமிகள் இறைவனைக் கேட்கின்றார், இதுவே இப்பொருளை எடுத்தியம்பும் அருட்பாவாகும்.

''பத்திநீ பத்திக்கான பலனுநீ பலவாச் சொல்லும்
சித்திநீ சித்தர் சித்தித்திறமுநீ திறமார் மோன
முத்திநீ முத்திக்கான முதலுநீ முதன்மையான
புத்திநீ யெனக்கொன் றுண்டோ பூரணனந்த வாழ்வே''

உலகத்திலே மனிதன் பிறந்து இறந்து போவதை நாம் நித்தியம் கண்டும் பிறப்பதற்கு ஆளாகி இறக்கின்றோம். இந்நிலையைத் தவிர்த்துப் பேரானந்தப் பெரு வாழ்வை அடைவதற்கு இறைவன் என்றும் துணையாய் இருக்கின்றான். எங்களுடைய அறிவு, இச்சை, செயல்களை அநித்தியமாகிய மாயப் பொருள்களில் செல்லவிடாது நித்தியமானதும். உயிருக்கு என்றும் துணையாயும் இருக்கின்ற இறைவன் மீது பக்தி செலுத்தி ஒழுக வேண்டும்.

''பத்தியை எனக்கருளி, முத்தியை யளித்துவளர்
பச்சை மயிலுற்று வரவேணும்''

என்பதற்கிணங்க முத்திநிலை அடைவதற்குரிய பக்தியை அருள வேண்டுமெனப் பிரார்த்திப்போமாக.

# அறுமுகனின் அருள்மிகு தலங்கள்

## அ று ப த் த ா று

திரு. புலவர் பி. ரா. நடராசன் அவர்கள்
தமிழாசிரியர், பிஷப் ஈபர் உயர்நிலைப் பள்ளி,
புத்தூர் – திருச்சி. 17.

### 3. தஞ்சாவூர் மாவட்டம்

(மலர் 26 பக்கம் 31ன் தொடர்ச்சி)

1. சுவாமிமலை 2. எட்டிகுடி 3. எண்கண் 4. சிக்கல் 5. கீழ்வேளூர் 6. வைத்தீஸ்வரன் கோயில் 7. கொண்டல் 8. திருமயிலாடி 9. கந்தன்குடி 10. திருவிடைக்கழி 11. பெரம்பூர்.

### 9. கந்தன்குடி திருப்புகழ்:

எந்தன்கட லங்கம்பல பங்கம்படு தொந்தங்களை
யென்றுந்துயர் பொன்றும்படி யொருநாளே
இன்பந்தரு செம்பொன்கழ லுந்தங்கழல் தந்தும்பினை
யென்றும்படி பந்தங்கெட மயிலேறி
வந்தும்பிர சண்டம்பகி ரண்டம்புலி யெங்கும்திசை
மண்டும்படி நின்றுஞ்சுட ரொளிபோலும்
வஞ்சங்குடி கொண்டுந்திரி நெஞ்சன்துக ளென்றுங்கொளும்
வண்டன்தமி யன்றன்பவம் ஒழியாதோ
தந்தந்தன திந்திந்திமி யென்றும்பல சஞ்சங்கொடு
தஞ்சம்புரி கொஞ்சுஞ்சிறு மணிபாரம்
சந்தந்தொனி கண்டும்புய லங்கன்சிவ னம்பதி விளையாடும்
கந்தன்குக னென்றன்குரு வென்றுந்தொழு மன்பன்கவி
கண்டுய்ந்திட அன்றன்பொடு வருவோனே
கண்டின்கனி சிந்துஞ்சுவெ பொங்கும்புனல் தங்குஞ்சுனை
கந்தன்குடி யின்தங்கிய பெருமாளே.

**10. திருவிடைக்கழி:** மாயூரத்திலிருந்து தரங்கம்பாடி யிலுள்ள திருக்கடையூர் ஸ்டேஷனிலிருந்து 4 மைல். திருக்கடையூர் அட்டவீரட்டானங்களில் ஒன்று சிறந்தகோயில். அபிராமிபட்டர் வணங்கிய தலம். திருக்கடையூருக்கு மாயவரத்திலிருந்து டவுண்பஸ் வசதி உண்டு. மாயவரத்திலிருந்து பொறையாறு செல்லும் பஸ்களிலும் திருக்கடையூர் செல்ல

லாம். மாயூரத்திலிருந்து பொறையாறு வழி தில்லையாடி வள்ளியம்மை செல்லும் பஸ்ஸில் ஏறி தில்லையாடி வள்ளியம்மை நகரில் (காந்தியடிகளுக்குத் தென் ஆப்பிரிக்காவில் உதவிய தமிழ்ப்பெண்) இறங்கி வடக்கே 2 மைல் செல்ல வேண்டும். (திருக்கடையூருக்கும் தில்லையாடி வள்ளியம்மை நகருக்கும் 3 மைல். நல்லகோயில். சிறிய கிராமம், முருகன் திருக்குராமர நிழலில் எழுந்தருளியுள்ளான். சிவாலய அமைப்பில் அமைந்த சிறந்த முருகன் கோயில். எல்லா இடங்களிலும் இவனின் அழகிய கொலுவீற்றிருக்கையைக் காணலாம். சோமாஸ்கந்த மூர்த்தி உள்ள இடத்தில் வள்ளி தேவசேனு சமேதனுய் முருகன் உள்ளான். மன்றில் நடமாடும் பெருமான் இருக்க வேண்டிய சபாமண்டபத்தில் முருகன் இடது கையில் வில்லுடனும் வலது கையில் வேலுடனும் அற்புதமாகக் காட்சி தருகின்ருன். மூலவராக விளங்கும் முருகன் நல்ல அழகிய கோலத்துடன் ஒரு முகத்தனுய் தனித்துக் கிழக்குப் பார்த்து நிற்கின்ருன். இவன் பின்னே இறைவனின் இலிங்கத் திருமேனியினைக் காணலாம். மூலவரான முருகனுக்கு முன் ஸ்படிகலிங்கம் காணப்படுகிறது. சேயான முருகனுக்கு முன்னும் பின்னும் தந்தையான இறைவன் இருக்க அம்மையில்லை. தெய்வயானைக்குத் தனிச்சன்னதி உளது (தெய்வயானைக்குத் தனிச்சன்னதி உளதை பெரம்பூர், கந்தன் குடியிலும் காணலாம்) தெய்வயானைத் தன் தலைவனை முருகன் நிற்கும் திசை பார்த்து நிற்பதால் பிராட்டியாரின் திருவுரு சன்னதிக்கு நேராக இல்லாமல் சற்று சாய்வாக உளது.முதன் முதலில் முருகன் எழுந்தருளிய திருக்குராமரத்தினைக் கோயிலின் சுற்றில் காணலாம். அம்மர இலைகளைத் தின்ருல் விஷக் கடிகள் நம்மை ஒன்றும் செய்யாதாம். மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் முருகன் மீது பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். இத்தலத்திற்கு மகிழாரண்யம் என்ற வேறு பெயரும் உண்டு. திருப்புகழ் பெற்ற தலம், சைவத் திருமுறையான பன்னிரண்டில் 9ம் திருமுறையான திருவிசைப்பாவில் சேந்தனுர் பாடிய 'நற்ருயிரங்கல்' என்னும் அகப்பொருள் துறையில் ஒரு பதிகம் இத்தலத்திற்கு உளது. மாதக் கார்த்திகை விசேடம், கந்தசட்டி விழா சிறப்புடையது. அறநிலைய ஆட்சித்துறைக்குட்பட்ட கோயில், தங்கும் வசதி இல்லை.

**திருப்புகழ்:**

பகரு முத்தமிழ்ப் பொருளு மெய்த்தவப்
பயனு மெப்படிப் பலவாழ்வும்
பழைய முத்தியிற் பதமு நட்புறப்
பரவு கற்பகத் தருவாழ்வும்
புகரில் புத்தியிற் றரசு பெற்றுறப்
பொலியும் அற்புதப் பெருவாழ்வும்
புலன கற்றிடப் பலவி தத்தினைப்
புகழ்ப லத்தினைத் தரவேணும்
தகரி பெற்றதைத் தலம்வி டப்பிணைச்
சரவ ணத்தினிற் பயில்வோனே
தனிவனத் தினிற் புனம றத்தியைத்
தழுவு பொற்புயத் திருமார்பா!
சிகர வெற்பினைப் பகிரும் வித்தகத்
திறல யிற்சுடர்க் குமரேசா
செழும லர்ப்பொழிற் குரவ முற்றபொற்
றிருவி சைக்கழிப் பெருமாளே.

11. **பெரம்பூர்:** மாயவரம் வரை இரயில் வசதி உண்டு, மாயவரத்திலிருந்து டவுன்பஸ் வசதி உண்டு. டவுன்பஸ் தவிர மாயூரத்திலிருந்து பெரம்பூர் வழியாகச் செல்லும் நாகப் பட்டினம், பொறையாறு, கல்லடை முதலிய வெளியூர் பஸ்களிலும் சென்று கோயிலின் முன் இறங்கலாம். பெரிய கோயில், மாயவரம்–திருவாரூர் வழியிலுள்ள மங்கநல்லூரி லிருந்து $3\frac{1}{2}$ மைல். எம்பெருமான் முருகன் மயிலுக்கு உபதேசம் செய்த தலம். முருகன் வள்ளி தேவசேனசமே தனாய் முன்னும் பின்னும் ஆறு திருமுகங்களாக மயிலின் மேல் அமர்ந்த கோலத்தில் கிழக்கு பார்த்துள்ளார் கோயிலின் நுழைவாயிலில் முருகனுக்கு எதிரே மயிலும், அகத்தியரும் உளர். அடுத்தகட்டில் முருகனுக்கு எதிரே யானை உளது! தெய்வயானைக்குத் தனிச் சன்னதி உளது. (தெய்வயானைக்குத் தனிச் சன்னதிகளைக் கந்தன்குடி, திருவிடைக்கழியில் காண லாம்) பாடல்கள் இருப்பதாகத் தெரியவில்லை. தங்கும் வசதி கிடையாது, மாதக் கார்த்திகைச் சிறப்பு, கந்தசட்டி விழாச் சிறப்பு. அறநிலைய ஆட்சித்துறைக்குட்பட்ட கோயில்.

சிவ சிவ]

உ

ஓம் ஸ்ரீகுருப்யோ நம

# அன்பர்கட்கு ஒரு அறிவிப்பு

பேரன்புடையீர்! நமஸ்காரம்.

தமிழ்த் தெய்வமான முருகப்பெருமானுக்கு துங்கபத்திரா நதிக் கரையில் ஸ்ருங்ககிரியில் ஸ்ரீ ஸ்ருங்ககிரி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய குருமகா சன்னிதானம் அவர்கள் ஒரு கோயில் கட்டத் தீர்மானித்துள்ளார்கள். அதற்காக அடியேன் உபந்யாசம் செய்து கிடைக்கும் பொருளில் பெரும்பாலான துகையை மேற்படி திருப்பணிக்கு சமர்ப்பிக்க ஆரம்பித்துள்ளேன் திருநெல்வேலி டவுனில் 5—1—75 & 6—1—75 இருதினங்கள் உபந்யாசம் செய்து ரூ 400/- (நானூறு) சமர்ப்பித்துள்ளேன். அம்பாசமுத்திரம் முதலான இடங்களில் முழு ராமாயணங்களே ஏற்பாடாகியுள்ளன. இதைக் கண்ணுறும் அன்பர்கள் தங்கள் தங்கள் ஊர்களில் எத்தனை நாட்கள் ஏற்பாடு செய்ய முடியுமெனத் தெரிவித்தால் மற்றவிவரங்கள் அனுப்புகிறேன். அந்தந்த ஊர்களிலிருந்தே ஸ்ரீமகா சன்னிதானம் அவர்களுக்கு துகை அனுப்பப்பெறும். புராண சிரவணம், இலக்கிய இன்பம், ஸ்ரீ முருகன் அருள், ஸ்ரீ ஆசார்ய அனுக்ரகம் இவை ஒன்ருகக் கிடைக்கும் இச்சந்தர்ப்பத்தை அன்பர்கள் தங்கள் ஊர்களில் பயன் படுத்திக் கொள்ள வேண்டி நிற்கும், தயவு செய்து பதில் எழுதவும்.

நமஸ்காரம்,

தந்தி "RAMAKATHA"
PUDUKKOTTAI.

ஸ்ரீ ராமகதாரத்ன V. தியாகராஜன்
ஸ்ரீராமகதா நிலையம்.
கீழ இரண்டாம் தெரு
புதுக்கோட்டை-1.

---

## பிழை திருத்தம்

"குமரகுருபரன்" மலர் 26. இதழ் 1. பக்கம் 89ல் "குனித்த புருவமும்" என்ற பாடலில் திருத்தம்:-

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற்பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமுங் காணப் பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"

— அப்பர் பெருமான்.

# இயற்கைக் கன்னி, இறைமைக் கன்னி

திரு. அ. சுவாமிநாதன் அவர்கள்,
துணை அஞ்சலகத்தலைவர்
அரியாங்குப்பம் 605007.

"Nature is my reading book" என்று மேல்நாட்டு அறிஞர் ஒருவர் கூறியுள்ளார். "இயற்கை தரும் படிப்பினை" என்று நம் நாட்டறிஞர்களும் ஆங்காங்கே தெளிவூட்டியுள் ளனர். இயற்கை என்பதை ஈண்டு ஓர் கன்னியாகவே கொள்வோம்; என்றைக்கும் இயற்கைக் கன்னிக்கு அழிவே கிடையாது. இன்று வாடி நிற்கும் தாவரங்கள் அனைத்தும் விசும்பின் துளி வீழின், உடனே பச்சிள நிறத்தோடு பளிச் சிடக் காண்கிறோம். முன்நின்ற அழகுக்குச் சற்றும் சளைக்கா மல் பொலிவோடு விளங்கச் செய்யும். பண்டைய கவிஞர்கள் கண்டு ரசித்த அழகு இன்றும் மாறுமல் இயற்கைக் கன்னி ஒளிரக் காணலாம். இதனுல் தன்னிகரில்லா இறைமைத் தன்மை கொண்டவள் இயற்கைக் கன்னிஎன்னலாம். மேலும் கூறப்போனுல் அவளே இறைமைக் கன்னியும் ஆகிருள்.

ஐம்பெரும் பூதங்களால் ஆன இவ்வுலகில், அவற்றின் ஆட்சியும், இன்றியமையாமையும் யாரே அளவிட வல்லார்? நீரும், நிலனும், காற்றும், ஒளியும்,வானும் செய்யும் தொடர்பு மிக்கக் காரியங்களின் அடுக்கடுக்கான அரிய சாதனைகள் இறை யருள் இன்றி நடக்குமா? இவற்றில் ஒன்று சிறினும் உயிரினம் நிலைகொள்ளும் வல்லமைதான் உண்டோ? அவற்றின் ஆற்றலை வியந்து போற்றியே சான்றோர்கள் "ஐம்பெரும் பூதம்" என்று நல்லதோர் பொருத்தமான பெயரைச் சூட்டியுள்ளனர். கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றுங்கே எடுப் பதூஉம் எல்லாம் பூதங்களே என்னில் மிகையாகாது.

நீதி நூல்கள் பலவும் உலகம் எங்கும் நிரம்பியுள்ளன. அவற்றைப் படித்துத்தான் தெரியவேண்டும். திருந்தவேண்டும் என்ற நியதி வேண்டியதில்லை. காரணம், இயற்கைக் கன்னி யவள் பாடம் புகட்ட எந்நேரமும் காத்துக் கிடக்கிருள். ஒற்றுமை அறிவுபுகட்ட காக்கை இனம்; நன்றி அறிவுபுகட்ட

நாயினம்; பொறுமையைப் புகட்ட பூமி; அன்பு தெருட்ட பசுவினம்; இன்ப கீதம் நினைவூட்ட இசைக்கும் குயிலினம்; கைம்மாறு கருதா கடப்பாடு புகட்ட வான்மழை; அமைதி வேண்டவே தென்றல்; சைவம் எவ்விதத்திலும் சளைத்தது அல்ல என்பதை உறுதிப்படுத்தவே மிகவும் பெரிய மாமிச உருவமான யானை இனம், இப்படிப் பலப்பல கோணங்களில் நின்று இயற்கைக் கன்னியவள் இறைமைக் கன்னியாக விளங்கி அறிவு பெருக்குகின்ருள். வேறு, மாருன குணங்களும் இயற்கைப் படிப்பினையில் காண்கிறதெல்லாம் பின்னே எற்றுக்கு என்றும் வினவலாம், அதுவும் அக்கன்னி நமக்கு அறிவூட்டவே வெளிப்படுத்துகிருள் என்னலாம். நெஞ்சில் கரவுடையார் ஒளிந்தே வாழ்வர் என்பதற்கு அத்தாட்சி யாகவே நஞ்சுடைய பாம்பு அஞ்சி மறைந்து வாழ்கிறது. நஞ்சற்ற நீர்ப்பாம்பு அஞ்சாமல் புறம் கிடக்கக் காண்கிருேம்.

மாமிச உணவு கொள்ளும் பக்ஷிகளும், மிருகங்களும், எவ்வளவு முரட்டுக் குணங்களுடன் உள்ளன. என்பதை நினைவூட்டவே இறைமைக் கன்னி இயற்கைக் கன்னியாகவே நின்று நல்லதோர் படிப்பினை ஊட்டுகிருள். நீர்வாழ் உயிரி னங்கள் நிலம்வாழ் உயிரினங்கட்கு நேர்மாருன வாழ்வமைப் போடு உள்ளன, இடம் மாற்றி வைப்பின் கதை முடிந்து விடும். இது நல்ல படிப்பினை தரவில்லையா?

உண்ணும் உணவு, உடுக்கும் உடை, இருக்கும் இடம் அனைத்துமே இயற்கைக் கன்னியால் பெறுகிருேம். நோய்கள் வருவதும் அவை நீங்க மருந்து அளிப்பதும் இயற்கை எனும் இறைமைக் கன்னியால். இயற்கைக்கு மாருக நடப்பின், அக் கன்னியின் பெருஞ் சீற்றத்திற்கு ஆளாகிவிடுவோம். பண்டு நம் முன்னேர்கள் இயற்கைக் கன்னியையே வழிபட்டனர் என்பது அனைவரும் அறிந்தமையே.

சிலம்பை இசைத்த இளங்கோவடிகள் இயற்கைக் கன்னியை வணங்கியே காப்பியத்தைத் தொடங்குகிருர் அதனை அவள் அருள் கலந்து அமுதமாக்குகிருர். அவர், ஒப்பற்ற கவிஞர் ஆனமையால் இயற்கைக்கன்னியை இறைமைக் கன்னி யாகக் கொண்டு உண்மை வணக்கம் செலுத்திவிட்டார். அவரது இறைவணக்கம் இயற்கைக்கு செலுத்தும் வணக்க மாகவே நின்று மிளிர்வதை ஓதி, ஓதி உணரலாம் இன்புறலாம் ''மருவி யெப்பொருளும் வளர்ப்போன் காண்க'' என்று

மணிவாசகர் கூறுவதின் உட்பொருளை நோக்க வேண்டும். மலையும், குன்றுகளும் வளர்வதாகக் கூறும் செய்திகள் எவ்வளவு உண்மை! சில லிங்கங்கள் நந்திகள் சிற்ப வடிவில் இருந்தாலும், வளர்ந்து வருவதாக அறிஞர்கள் கூறக் கேட்டிருக்கலாம். கல்லினுள் தேரை எவ்வளவு பாதுகாப்புடன் உயிர்தரித்து வாழ்கிறது, என்ற உண்மையையும், மணிவாசகரின் மாணிக்கவாசகங்கள் புலப்படுத்தும்.

இயற்கையாம் மழையைப் பொழியும்படி வேண்டும் மணிவாசகர் "அவன் இன்னருளே என்னப் பொழியாய்" என்று எப்படி உதாரணங் கொடுத்துப் புகழ்ந்து பாடுகிறார் என்பதை ஆய்ந்து பார்க்க வேண்டும். இயற்கையையும், இறைமையையும் எவ்விதம் இணைத்து மதித்தார் என்பதும் விளங்கும்,

மகாகவி பாரதியார், தம் கவிதைகளில் இயற்கையை இறைமையாகக் கொண்டு ஐம்பூதங்களையும் பல கோணங்களில் புகழ்ந்து பாடியிருக்கக் காணலாம். எல்லாம் அடங்க "எத்துணை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா, இறைவா, இறைவா" என்று தொடங்கும் கவிதையில் கூறியுள்ளார்.

**"சித்தினை அசித்துடன் இணைத்தாய் – அங்கு**
**சேருமைம் பூதத்து வியனுல கமைத்தாய்**
**அத்தனை யுலகமும் வர்ணக் களஞ்சிய**
**மாகப் பலபலநல் லழகுகள் சமைத்தாய்"**

இறுதியில் அக்கவிஞரின் "மனமே" என்ற கவிதையில் சில வரிகளை நினைவுப்படுத்தி இக்கட்டுரையை முடிப்போம்.

**"நலமே நாடிற் புலவீர் பாடீர்;**
**நிலமா மகளின் தலைவன் புகழே**
**புகழ்வீர் கண்ணன் தகைசே ரமரர்**
**தொகையோ டசுரர்ப் பகைதீர்ப் பதையே**
**தீர்ப்பான் இருளைப் பேர்ப்பான் கலியை**
**ஆர்ப்பா ரமரர் பார்ப்பார் தவமே**
**தவறு துணர்வீர் புவியீர் மாலும்**
**சிவனும் வானோர் எவரும் ஒன்றே;**
**ஒன்றே பலவாய் நின்றோர் சக்தி**
**என்றுந் திகழும் குன்று வொளியே"**

நாமும் தவறுமல் தினமும் இயற்கைக் கன்னியாம் இறைமைக் கன்னியின் அருள் போற்றி, முறைப்பட வணங்கி வளம்பெற முயல்வோம்!

உ
சிவமயம்

# குமரகுருபரனுக்கு வாழ்த்து

(நேரிசை வெண்பா)

சிவம்பெருக்கிச் செந்தமிழின் சீர் பெருக்கி மற்றை
அவஞ் சுருக்கி ஞானவொளி யாக்கும்—நவநவமாம்
கட்டுரைகள் தாங்கிக் குமர குருபரன்முன்
தட்டின்றி வாழ்க! தழைத்து.

வள்ளல் பனசை வளர் பரமாச் சாரியனுர்
உள்ளத் துயரருளால் ஓங்கியே—வெள்ளி
விழாக்கொள் குமர குருபரன்மென் மேலும்
வழாதுநூ றுண்டுவளர் வான்

சித்தாந்த வேதாந்தச் சீர்கொள் கருத்தெல்லாம்
வித்தார மாக விளக்கியே—ஒத்தார்
உயர்ந்தா ரெலாம்போற்ற வோங்குங் குமரன்
உயர்ந்தான் தமிழுலகத் துற்று

வளருங் குமர குருபரனே ந் தைந்தாண்
டிளமை நலங்கொண்டான் என்றும்—பளபளக்கத்
தோற்றமிகக் கொண்டினிமேல் தூயவுப தேசஞ்செய்(து)
ஏற்றமொடு வாழ்க இனிது.

அ. முத்தையன்,
சற்சங்கம்,
கண்டாச்சிபுரம்.


## "ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்'

உள்நாடு ரூ. 6-00 வெளிநாடு ரூ. 10-00

செயலாளர், "ஞானசம்பந்தம்" அச்சகம்"

தருமபுரம், மாயூரம் P. O.

# கீழ் உடையும் கொண்ட உருவம்

**திரு, ர. வேங்கிடரத்தினம் அவர்கள்,**
E. *168* அண்ணுரோடு, (ப்ளாக் *17*)
நெய்வேலி-*1*.

(மலர் 25. 519ம் பக்கத்தொடர்ச்சி)

**குறிப்பு:** இக்கட்டுரையாளர் திருஞானசம்பந்தர் தேவாரம் அடிப்படையாகக் கொண்டு தனித்தனியாக 12 கட்டுரைகள் குமரகுருபரனுக்கு எழுதி பிரசுரமாகி வந்ததில் இதுவே 12வது கட்டுரையாகும் முற்றிற்று.
**ஆசிரியர்.**

பெண்கள் பொய்கைகளில் குளிப்பது ஒரு சாதாரண மான காட்சிதான். எனினும் காழியர்கோன் கவினுறக் கூறும் காட்சி முற்றும் வேருனது.

நீர் பாய்ந்தோடும் மடையில் மீன்கள் அங்கும் இங்குமாய் நீந்திக்கொண்டிருக்கின்றன. அவற்ருல் பிற எவர்க்கும் தொல்லையில்லை. அப்படி அவை நீரில் நீந்திக் கொண்டு இருக் கும் போது, தண்ணீரைக் கலக்கியவாறு குளிக்க இறங்கு கிருர்கள் சில பெண்கள். ஏதோ வந்தோம். குளித்தோம், கிளம்பினேம் என்று இராமல், அம்மகளிர் நீரில் தலை மூழ்கி யும் எழுந்தும் நீந்தியும் மிதந்தும் பொழுது போக்குகிருர்கள் உடன், நீரில் அலைமோதிக்கொண்டு குமிழிகள் காற்ருேடு கிழம்புகின்றன. இத்துணை அசைவையும் நீரில் பொறுத்துக் கொண்டு மீன்கள் இருக்க முடியுமோ? அவை அப்பெண்டி ரின் அசைவுகட்கேற்பக் குதித்தும் துள்ளியும் செல்கின்றன,

இக்காட்சித் தென்படுவது திருக்கோலக்கா எனும் பதி யில் உள்ள பொய்கைகளில்!

**மடையில் வாளை பாய மாதரார்**
**குடையும் பொய்கைக் கோலக் காவுளான்**
**சடையும் பிறையுஞ் சாம்பாற் பூச்சுங்கிழ்**
**உடையும் கொண்ட உருவம் என் கொலோ?**

பொய்கைகளையும் தடாகங்களையும் கடந்து உட்சென்ருல், எம்பிரானைத் தரிசிக்கலாம். தலையில் சடாமுடி, அதில் பிறைச் சந்திரன் தண்ணொளி வீசுகிருன். உடல் நெடுகச் சாம்பற்

பூசியுள்ளது அரையில் கோவணமாகக் கச்சம் கட்டிய ஈசன் திருவுருவம் சம்பந்தர் பெருமானை வியப்பில் ஆழ்த்தும். இது என்ன கோலம்? எதற்காக இந்தப் பொடிப் பூச்சும் அரைக் கச்சும் என அவர் எம்பெருமானை வியப்புடன் வினவுவார்.

கண்களுக்கு இனிய உருவமாய்த் திகழ்பவர் சிவபிரான். எண்ணங்களின் பயனாக உள்ளவர் அவரே என்று இறைவனை எப்படி எளிதிற் கூறுகிறோமோ அதேபோல் கண்கொள்ளாக் காட்சியாகவும் உருவம் அமைந்தவர் ஈசன் என்பார் சம்பந்தர்.

**எண்ஆர்தரு பயனாய் அயன்அவனாய் மிகுகலையாய்**
**பண்ஆர்தரு மறையாய் உயர் பொருளாய் இறையவனாய்க்**
**கண்ஆர்தரும் உருவாகிய கடவுள்ளிடம் எனலாம்**
**விண்ணோரொடு மண்ணோர் தொழுவிரி நீர்வியலூரே.**

சிவபெருமானின் சிறப்புகளைச் சுருங்கத் தொகுத்துச் சொல்வது இச்செய்யுள், எண்ணத்திற்கு உயர்வு அளிப்பவர் அவர். சிவபெருமானை எண்ணி உய்யலாம். படைப்புக் கடவுள் பிரமதேவனும் அவரே, உயிர்களைப் படைத்துப் பின் வாழ்விற்கு வளம்கூட்டும் கலைகளும் வழிகாட்டும் வேதநெறிகளும் அமைத்துத் தந்தவரும் ஈசனே. இவ்வளவெல்லாம் வளர்த்துவானேன்? அவரைவிட உயரிய பொருள் ஏதும் இல்லையெனல் போதும்! பரம்பொருள் ஆகிய அவரை அதனால்தான் பரமேசுவரன் என்கிறோம்.

சம்பந்தர் நீர்வளம் நிறைந்த திருவியலூர் எனும் பதியில் பாடும் பாட்டிது. தேவரும் மண்ணகத்தில் உள்ளோரும் ஒருங்கே போற்றி வழிபடும் தலம் திருவியலூராம். அவ்வூரினைக் கண் கொள்ளாக் காட்சியருளும் எம்பிரானுடைய உறைவிடம் எனப் பொருந்தும்.

கண் ஆர் தரும் உருவென்பதைக் கண்ணுக்கு முதன்மை கொண்ட முக்கண்ணன் வடிவம் என்றும் பொருள் கொள்வர்.

எண்ணத்தின் பயன், கலைகளின் சிகரம், வேதங்களின் விஷயம், கீதங்களின் இனிமை, ஒண்பொருள் என்றெல்லாம் கூறும் சம்பந்தர் பெருமான், திருவியலூர்ப் பெம்மானைக் கண்ணாரக் களித்தற்கான கவினுருக் கொண்டவர் என்றும்

வர்ணிப்பார். பரம் பொருள் ஆயினும், அதனைப் பார்த்தற்காகத் தானே பதிபதியாகப் போய்ப் பரமனை வழிபடுகிறோம்?

எனவே, உருவ வழிபாட்டு வழிக்கு உகந்த வண்ணம் பிள்ளையார் வெகு பொருத்தமாய் ஐயனின் தோற்றத்தினையும் புகழ்ந்து பேசுவார்.

சிவபெருமான் பார்ப்போரைத் தம்வயப்படுத்தும் வடிவு உடையவர். உள்ளங் கவரும் கள்வர் கண்ணையும் கவர்பவர் தாம்! அவர் தேனைக் காட்டிலும் இனிப்பவர், இனிமை அவர் தம் தன்மை. பாலைப் போன்ற வெண்ணீறு பூசுபவர். பால் நமக்கு உடலுக்கு ஊட்டம் அளிக்கிறது போல, திருநீறு உள்ளத்திற்கும் உயர்வு ஊட்ட வல்லது, இனிமை நிரம்பிய கரும்பெனவும் அவரைக் கொள்ளலாம். தேனைப் போல் துளியெடுத்து விரலினால் நாக்கில் தடவினால், கரும்பு இனிக்காது. சிறிது உழைப்பு வேண்டும். உறுதியான பற்கள் வேண்டும் கடித்துச் சுவைக்க, உள்ளத்தில் உறுதி உள்ளவர்களே சிவத்தைப்பற்றி நின்று சிவானந்தத்தைப் பருக வல்லவர். தம் திருத்தாள்கள் போற்றிப் பணியும் அடியவர்கள் மெய் சிலிர்க்கும் வண்ணம் ஆனந்தத்தில் திளைக்குமாறு அருள் புரிவார், உடல் அவ்வானந்தத்தில் பாகாய் உருகும். பக்தர் சிரத்தில் உறையும் பெருமான் அவர், அடியவர் எண்ணத்தில் உள்ள அப்பெருமானுக்குத் திருத்தலங்களும் எவ்வளவோ உண்டு. ஒன்று, இரண்டல்ல: பல ஊர்ப் பதிகளில் கோயில் கொண்டவர் சிவபிரான்.

**தேனினும் இனியர் பாலன நீற்றர்**
**தீங்கரும்(பு) அனையர்தம் திருவடி தொழுவார்**
**ஊன் நயந்துருக உவகைகள் தருவார்**
**உச்சிமேல் உறைபவர் ஒன்ற லாதூரார்**
**வானகம் இறந்து வையகம் வணங்க**
**வயங்கொள நிற்பதோர் வடிவினை உடையார்**
**ஆனையின் உரிவை போர்த்த எம் அடிகள்**
**அச்சிறு பாக்கம(து) ஆட்சி கொண்டாரே!**

உச்சிமேல் உறைபவர் தாம் சிவபிரான்; ஏனெனில் கைலைமலையில் வாழ்பவர் அவர். ஆகாயத்தையும் மீறிய பேர்உருக் கொண்டவர் என்னும்; பூவுலகினர் பார்த்துப் பணிதற்காக

வெற்றி கொள்ளும் வடிவினராகத் திருக்கோயில்களில் எழுந்தருளி நிற்பவர் அவர். ஆனையைக் கொன்று அதன்மேல் தோலையுரித்துப் போர்த்த பரமசிவன் அச்சிறு பாக்கத்தில் ஆட்சி நடத்துகிறார்! உள்ளங் கவரும் உருப் படைத்தவர் சிவ பெருமான்!

சிவபெருமான் பல கோலங்களில் காட்சித் தந்தருள்பவர். சிவனுருடைய திருக்கோலங்கள் பலவும் நமக்குப் பலவாறும் அருள்வனவாம்.

பிணிக்கு மருந்துகள் வேண்டின், சிவதரிசனம் போதும் பிணியகல, வேறு மருந்து வேண்டாம். மருந்து வேண்டாது, மாய மந்திரம்தான் வேண்டும் என்போர்க்கு, அவ்வண்ணம் மந்திரமாகவே அருள் புரிவார் ஐயன். மறைவாக்கியம் யாவும் மாதேவன் வாக்கே. புண்ணியங்கள் என்று வேறு வேண்டாம்; சிவபிரானின் திருக்கோலங்கள் கண் நிறைந்த புண்ணிய பலன்களாம்.

**மருந்து வேண்டில் இவை மந்திரங்கள் இவை**
**புரிந்து கேடகப்படும் புண்ணியங்கள் இவை**
**திருந்து தேவன்குடித் தேவர்தே வெய்திய**
**அருந் தவத்தோர் தொழும் அடிகள் வேடங்களே.**

இவை இவையென்று சம்பந்தர் பெருமான் சொல்லும் பொருள்கள் வேறேதுமல்ல, சிவபெருமானின் வண்ணத் திருக்கோலங்களேயே! திருந்து தேவன் குடிக்கோயிலில் வீற்றுள்ள தேவாதி தேவரான எம்பெருமானின் பல்வேறு மூர்த்தங்களையும் அலங்காரங்களையும் தவச்சீலர்களும் ஒழுக்கம் மிகுந்த உத்தமரும் தொழுது ஏத்துகின்றனர்.

எதற்குப் பல்வேடங்கள்?

இதற்கும் விடை பகர்வார் சீகாழிச் செல்வர்.

இறைவன் நமக்கு உகந்த நானுவித வேடங்களும் நமக்காகப் புனைந்தருள்பவர். எப்படிக்கேட்கிறோமோ அவ்வாறுகத் தோற்றம் ஏற்றுக் காட்சியருள்வது ஈசனின் அன்புச் செயலாகும், வேண்டிய வண்ணம் வேடம் தாங்கி நிற்பவர் என்று பிள்ளையார் பாடுவார்.

**நானாவித உருவாய் நமையாள்வான் நணுகாதார்**
**வானார் திரிபுர மூன்றெரி உண்ணச்சிலை தொட்டான்**
**தேனார்ந் தெழு கதலிக்கனி உண்பான் திகழ்மந்தி**
**மேனோக்கி நின்றிறங்கும் பொழில் வேணுபுரமதுவே.**

பின் இருவரிகள் வேணுபுரத்து வானரத்தைப் பாடும்; குரங்குச் சேட்டைகளையும் பிள்ளையார் பாராது விடமாட்டார். தேனின் இனிமை சொட்டும் வாழைப் பழத்திற்காகக் குரங்குகள் மேலே அண்ணாந்து நோக்கிப் பின் சரசரவெனக் கீழ் இறங்கிக் கொம்மாளம் போடும். இதெல்லாம் நடைபெறும் சோலைகள் நிறைந்த வேணுபுரம், சிவபெருமானின் திருப்பதியாகும். அவரோ தம்மை அண்டி அடிபணிவோர்க்காக என்ன வேடம் ஆயினும், பூண்டு ஆட்கொள்பவர். 'நானாவித உருவாய் நமை யாள்வான்' ஒதுங்கி நின்றது மன்றி, ஈசனோடு பகை பாராட்டிய திரிபுர அரக்கர்களை ஒழித்துத் தீர்ப்பதற்காக எம்பிரான் தீயாய்க் கனன்று வில்லையேந்தினார். வானில் திரிந்த புரங்கள் மூன்றும் தீக்கிரையாயின. வானில் சுற்றிய அரக்கர்க் கோட்டைகள் அழிந்தன.

நினைத்த வண்ணம் நெஞ்சில் நிற்பவர் எம்பெருமான். நாடிய வேடம் கைகூடும் அவரிடம், கேட்ட வண்ணம் தோற்றம் தருவார்!

சிவ சிவ]

# நான் கண்ட முருகன்

**ஸ்ரீமதி, P. S. இராமமூர்த்தி அவர்கள்,**
டால்மியாபுரம்

முருகனை நேரில் கண்டோர் யார்? கனவில் காணலாம்! கற்பனை செய்து மனக்கண்ணில் முருகனின் திரு உருவைக் காணலாம்! தற்காலத்தில் இக்கலியுகத்தில் முருகனை, அவனது தேஜோமயமான திவ்விய ரூபத்தை நேரில் காண்போர் யார்? அக்காலத்தில் அடியார்கள் தரிசித்தனர். அருணகிரி முருகனை ஆரத் தழுவினர்! ஔவையார் நாவல்மரத்தினடியில் முருகனிடம் வாத விவாதங்கள் புரிந்து, கேலி பேசி, முருகன் புகழ் பாடினர்! ஆனல் தற்காலத்தில் முருகனை நேரில் கண்டு, அவனது புகழை நம்மிடம் வந்து பாடுவோர் யாரேனும் உளரோ? என்னைக் கேட்டால் இல்லையென்றே கூறுவேன். காரணம், இப்பொழுது மக்களிடையே பக்தி பாவம் குறைவாகவும், நாஸ்தீகம் மிகுந்தும் காணப்படுகிறது. பக்தி மிகுந்தால் முருகன் பறந்தோடி வருவான்!

மக்களிடையே அன்பு, ஒற்றுமை, பிறர்க்கு ஆபத்தில் தேவைப்படும்பொழுது உதவும் மனப்பான்மையாவுமே குறைவாக இருக்கிறது. மக்களுக்குத் தேவையான மேலே சொன்ன நற்பண்புகளை வளர்த்தாலன்றோ அதற்கும்மேலான பக்தி செய்யும் பண்பு வளரும். அன்பு, ஒற்றுமை, கருணை, இரக்கம், சமயத்தில் உதவி போன்ற பண்புகளை வளர்த்தால் முருகனை மனித ரூபத்தில், சமயத்தில் உதவும் மானிடனுக, வழிப்போக்கனுக, இரக்கமுள்ள நண்பனுக, ஆபத்பாந்தவனுகக் காணலாம். நாம் இவன்தான் முருகன் என்றுஉணராமலே, நமது காவல்காரனுக மெய்க்காப்பாளனுக ஆபத்பாந்தவனுக வந்து உதவி பின் மறைந்து விடுவான்! இதற்கும் மேற்பட்ட பண்பான பக்தியை வளர்த்தாலோ, முருகன் திவ்விய ரூபத்துடன் தேஜோமயமாக வந்து நம்மை ஆட்கொண்டு விடுவான்.

''முருகா'' என்று ஒரு தரம் உள்ளன்புடன் அழைத்தால் அவன் வருவது நமக்குத் தெரியாது; வந்து உதவிவிட்டு பின் மறைந்து விடுவான்!

நான் ஒரு சமயம் குடும்பத்துடன் வயதான மாமியார், நாத்தனுர் ஆக ஆறுபேர்கள் க்ஷேத்திராடனம் செய்து கொண்டே ஸ்வாமிமலை வந்து சேர்ந்தோம். அன்று சரியான அமாவாசை இருட்டு. ஸ்வாமிமலை நெருங்கியதும் மின்சார கோளாறு காரணமாக ஒரே இருட்டு. மோட்டார் டிரைவர் கோயிலின் பின்புறம் எங்களை பயங்கர இருளில் சாமான் களுடன் இறக்கி விட்டு சென்று விட்டார்! கையில் டார்ச்சும் கொண்டு வரவில்லை. நேரமோ பத்துமணி. என்ன செய்வது என்று தெரியாமல் திகைக்க, குழந்தைகள் பயந்து கட்டிக்கொள்ள, வயதான மாமியாரும், நாத்தனுரும் குளிரில் நிற்க முடியாது தள்ளாட, என் மனம் 'பக் பக்' என்று அடித் துக் கொள்ள, நாவோ, "முருகா, சீக்கிரம் கோயிலுக்குள் நுழைய ஒரு வழி சொல்லேன். நீதான் ஆபத்பாந்தவனு யிற்றே. உன்னை தரிசிக்க வந்து முடியாது உன் வாசல் தெரி யாது தவிக்கிருேமே. வழிகாட்டு வழிகாட்டு" என்று முனகி யது ஏனெனில் ஊரும் எங்களுக்கு புதியது.

என் குரல் அவன் காதில் விழுந்து விட்டது போல் மனதில் ஒரே குதூகலம். அன்னை பராசக்தியின் மடியிலிருந்து ஓடோடியும் வந்தானே? சுவாமிமலையில் மின்சார வெட்டு என்று ஹரிகேனை ஏந்தி வந்தானே? தூரத்தில் முணுக்முணுக் கென்று ஒரு விளக்கொளி, வரவர பெரிதாகி இரண்டு குஞ்சு பொற்பாதங்கள் அருகில் தெரிகின்றன. குஞ்சு கால்கள் அருகில் வரவர என் கண்களுக்கு அவைகள் முருகனின் பொற்பாதங்கள் போலவே படுகின்றன. விழுந்து சேவிக்க மனம் விழைகிறது. அருகில் வந்துவிட்டான் சிறுவன். வயது என்னவென்று தெரியவில்லை. எட்டு இருக்கலாம். உருவம் தெரியவில்லை. ஒளிமயமான இரண்டு சிறு கால்களைத் தவிர வேறெதுவும் தெரியவில்லை. குரல் கேட்கிறது. "சாமி வழி தெரியலையா? வா சாமி, காட்டறேன்" அக்கால்களை வைத்த கண் வாங்காது நோக்கிக் கொண்டே பின் தொடர்கிருேம். நான் கனவில் நடப்பவளைப் போன்று ஒரு பரவசத்துடன் அக்கால்களையே நோக்கிக் கொண்டு நடக்கிறேன். மயிர்க் கால்கள் குத்திட்டு நிற்கின்றன. மனம், "இவன் முருகன்தான் அவன் குரலேதான்" என்று மெய்சிலிர்க்கிறது. கோயிலின்

வாசல், எல்லோரும் உள்ளே நுழைந்துவிட்டனர், அக்கால்கள் கோயிலைத் தாண்டி தூரத்தே சென்று மறைகிறது. நான் மெய்விதிர்க்கிறேன். ''அவனைக் கூப்பிடுங்கள்'' என்று இவரை வேண்டுகிறேன். இவரோ, ''அகாலமாகி விட்டது, அச்சிறுவனுக்கு என்ன வேலையோ'' என்று கூறி என்னையும் கோயிலினுள் அழைத்துக் கொண்டு வந்துவிட்டார்.

கோயிலினுள் நுழைந்து மலையேறி முருகனை தரிசிக்கிறோம். அவனது கால்களையே எனது கண்கள் நோக்குகின்றன. என்ன ஆச்சரியம்! எனக்கு ஒளிமயமான அக்குஞ்சு கால்களே தெரிகின்றன. என்னை அறியாது, ''அவனேதான் விளக்கேந்தி வந்தவனே இவன்தான்'' என்று உரக்க கத்துகிறேன். கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகுகிறது. உடனே எனது அருகிலிருந்தோர் 'சாமி வந்துவிட்டது' என்று கூறி கூடம் காண்பிக்கின்றனர். என் மனமோ சிரிக்கிறது, எனக்கா சாமி வந்திருக்கிறது? எங்களுக்கு வழிகாட்டியாக வந்த சுவாமிநாதனையன்றோ நான் கண்டு கொண்டேன், இவ்வாறு நான் முருகனைக் கண்டேன். இவனே நான் கண்ட முருகன் சமயத்தில் உதவுபவனாக, ஆபத்பாந்தவனாக, காவல்காரனாக, வழிகாட்டியாக, மானிடச் சிறுவன் உருவில் வந்து என்னை ஆட்கொண்டான்.

முருகன் திருவடிக் கமலங்களே துணை.

# சங்க இலக்கிய கடவுள் வாழ்த்துப் பாக்களில் சிவபெருமானின் திருவுருவ அமைப்புகள்

திரு, மா, செந்தில் செல்வகுமரன் M. A. அவர்கள்
தொல்பொருள் ஆய்வுத்துறை
39-யாகப்பா நகர் தஞ்சை-7.

மனிதன் தன்னைப் படைத்த இறைவனுக்குத்தான் பெருங் கோயில்களை எழுப்பி மகிழ்ந்தான். அப்பெருங் கோயில்களில் பல்வேறு தெய்வ உருவங்கள் இடம் பெற்றன. இவை ஆகமத்தின் அடிப்படையில் உருப் பெற்றவை. தெய்வச் சிற்பங்கள் படைப்பதற்கென்று தனித்தனி சுலோகங்கள் உள்ளன. சிற்பி இச்சுலோகங்களை மனத்துள் தியானித்துக் கொண்டு சிற்பத்தை வடிக்கும் பொழுது அச்சிற்பங்கள் அழகொடு தெய்வ சக்தியும் வாய்ந்தனவாக மலர்கின்றன.

**சிவபெருமான்:**

சிவபெருமான் வேத காலத்திலிருந்தே வழிபடப்பட்டு வரும் தெய்வமாக உள்ளார். இவர் வேத காலத்தில் ருத்திரன் என்ற பெயரொடு விளங்கினர் பின்பு புராண காலத்தில் இவர் அழித்தற் கடவுளாகக் காட்சியளிக்கிறர். சிவ வழிபாடு அக்காலம் தொட்டு இக்காலம் வரை சிறந்து விளங்கி வருவதற்கு எண்ணற்ற சிவன் கோயில்கள் சான்று பகர்வன வாய் உள்ளன. முற்காலத்தில் சிவபெருமான் 'லிங்க' வடிவில் மட்டும்வழிபடப்பட்டு வந்தார். பிற்காலத்தில் அவருக்கு எண்ணற்ற உருவங்கள் தோன்றின. இவ்வுருவங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கு 'உருவ அமைதி' பற்றிய கல்வியறிவு (Knowledge of Iconography) தேவை. இந்தக் கல்வி பற்றி சிறிது கூறுவதாகவும், சங்க இலக்கிய கடவுள் வாழ்த்துப் பாடல்களில் சிவ உருவ அமைதி எவ்வாறு அமைந்துள்ளது என்று கூறுவதாகவும் இக்கட்டுரை அமையும்.

**தென்முகக் கடவுள்:**

சிவபெருமானின் பல்வேறு உருவங்களுள் ஒன்ருகக் கருதப்படுவது தென்முகக் கடவுளாகும். இவ்வுருவத்தை

'தட்சிணாமூர்த்தி' என்று பெரும்பாலும் கூறுவர். இவர் உயிரினங்களுக்கு ஞானத்தைப் போதிக்கும் கடவுளாகக் கருதப்படுகிறார்.

கோயில் சுவற்றின் வெளிப்புறம் மாடம் போன்ற அமைப்புக்கள் அமைக்கப் பெற்றுத் தெய்வ உருவங்கள் வைக்கப் பெற்றுக் காட்சியளிக்கும். இம்மாடம் போன்ற பகுதிகளைத் தெய்வக் கோட்டங்கள் என்று கூறுவர். கோயில்களில் பொதுவாகக் கருவறைச் சுவற்றில் மூன்று கோட்டங்களும் அர்த்த மண்டபச் சுவற்றில் இரண்டு கோட்டங்களாக ஐந்து கோட்டங்கள் காணப்படும். இவற்றுள் பெரும்பாலான சிவன் கோயில்களில், கருவறையின் தென்புறச் சுவற்றில் உள்ள கோட்டத்தில் தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் இடம் பெறும்.

**வகைகள்:**

தட்சிணா மூர்த்தியின் திருக்கோலத்தை, யோக தட்சிணாமூர்த்தி, ஞான தட்சிணாமூர்த்தி, வியாக்யான தட்சிணாமூர்த்தி வீணாதர தட்சிணாமூர்த்தி; என்று நான்கு வகைப்படுத்தி கூறுவர். இவை ஒன்றோடு ஒன்று சிற்ப அமைதியில் மாறுபட்டுத் திகழ்வன.

**உருவ அமைதி;**

தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் பொதுவாக மலைமேல் வலக்காலைத் தொங்கவிட்டு முயலகன் மேல் ஊன்றி. இடக் காலை வலதுகாலின் தொடைமீது செலவிட்டு அமர்ந்த நிலையில் உருவாக்கப் பெற்றுந் திகழும், நான்கு கரங்களுடன் காட்சி யளிக்கும். பின் வலக்கரத்தில் அக்க மாலையும், பின் இடக் கரத்தில் அக்கினி அல்லது பாம்பு அல்லது மலர் காணப்படும். முன் வலக்கரம் அபய முத்திரை காட்டியும், முன் இடக் கரத்தில் வரதமுத்திரை காட்டியும் காட்சிதரும். தலை அலங்காரம் பொதுவாகச் ஜடாபாரமாகக் காட்சியளிக்கும். சில இடங்களில் ஜடா மண்டலமாகவும், ஜடா பந்தமாகவும், ஜடா மகுடமாகவும் உருவாக்கப் பெற்றுத் திகழும். ஜடைப் பகுதியில் கங்கை, கபாலம் முதலியன காட்சியளிக்கும். சிற்சில இடங்களில் இச்சிற்பத்தின் பின்பு ஆலமரம் காட்டப் பெற்று

இயற்கையாகப் பொலிவு தரும். தட்சிணாமூர்த்தியின் திருநிறம் வெள்ளையாகவோ, மஞ்சளாகவோ, சிவப்பாகவோ காட்டப் பெறலாம். சிற்பங்கள் பொதுவாக நிறம் காட்டப் பெறுவ தில்லை. இறைவனின் காதுகளை பத்திர குண்டலங்கள், அழகு செய்யும், இத்தட்சிணாமூர்த்தியின் திருவுருவத்தின் பக்கங் களில் முனிவர்களின் உருவங்கள் சிறியனவாக உருவாக்கப் பெற்றிருக்கும்.

**சங்க இலக்கிய கடவுள் வாழ்த்துப்பாக்கள்;**

சங்க இலக்கியக் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் சிற்ப நூல்களைப் போல் இறைவனின் பல்வேறு உருவ அமைதி களைப் பற்றித் தெளிவாகக் கூறுவிடினும் அவற்றின் பெயர் களைத் தொட்டுக் காட்டுகின்றன. சங்க இலக்கியங்களுள் ஒன்றாகத் திகழ்வது கலித்தொகையாகும். இது கடவுள் வாழ்த்துப் பாடலுடன் தொடங்குகிறது. இப்பாடல் சிவ பெருமானின் பல்வேறு திருக்கோலத்தை விவரித்தும் புகழ்ந் தும்கூறுகின்றது. இத்திருக்கோலங்களுள் ஒன்றாகத் தட்சிணா மூர்த்தியின் திருவுருவமும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. ஆறு அங்கத்தையும் அறியும் அந்தணர்களுக்கு உயர்ந்த வேதங்கள் பலவற்றை சிவபெருமான் அருளிச் செய்தார் என்று குறிப்பிடுகிறது. இந்த வரிகள் தென்முகக் கடவுளைக் குறிப்பிடுவதாய் அமைந்துள்ளன.

''ஆறறி அந்தணர்க்கு அருமறை பலபகர்ந்து''

என்பது பாடல் வரி.

**உமையொரு பாகன்;**

சிவபெருமானின் திருவுருவங்களில் மிகவும் குறிப்பிடத் தக்க ஒன்றாக உள்ளது. உயரிய தத்துவத்தை தன்னுள் அடக் கியது, உமையொரு பாகன் திருவுருவமாகும்.

இவ்வுருவ அமைப்பு தோன்றியதற்கான கதைகள் பல உள. அவற்றுள் சிறப்பாக உள்ளது பிருங்கி முனிவருடன் தொடர்புடைய கதையாகும் பிருங்கி முனிவர் உமை யம்மையை வலம்வர மறுத்ததால் உமையம்மை சிவனுடன் இணைந்து நின்றதாக இக்கதை குறிப்பிடும்.

இவ்வுருவம் சிற்பமாகவும். செப்புத் திருமேனியாகவும் வடிக்கப் பெற்றுத் திகழ்கிறது. முற்காலச் சோழர் கோயில்களின் கருவறையின் பின்புறக் கோட்டத்தில் இவ்வெழில் உருவம் பெரும்பாலும் இடம் பெறுகின்றது.

(எ.டு) *திருப்பூந்துருத்தி,*

**உருவ அமைதி:**

இவ்வுருவம் பாதி ஆணுருவமாகவும் பாதி பெண்ணுருவமாகவும் உருவாக்கப்பட்டிருக்கும். நான்கு கரங்களோடு அல்லது மூன்று கரங்களோடு காணப்படும். மூன்று கரங்களோடு காணப்பட்டால், கீழ் வலக்கரம் ரிஷபத்தின் மீது ஊன்றிய நிலையிலும் மேல் வலக்கரம் மழு ஏந்திய நிலையிலும் காணப்படும். இடக்கரம் மலர் தாங்கிக் காட்சியளிக்கும், தலையின் வலது புறத்தை ஜடாமகுடமும், இடது புறத்தை கரந்த மகுடமும் அழகு செய்யும்.

சங்க இலக்கியங்கள் பல இவ்வுருவம் பற்றிக் கூறுகின்றன.

**''ஊர்ந்தது ஏறே சேர்ந்தோள் உமையே''**

என்று அகநானூறும்.

**'பெண் ஒரு திறனாகி''**

என்று புறநானூறும் குறிப்பிடுகின்றன. இக்கருத்தினையே,

**'நீலமேனி வாலிழை பாகத்து''**

என்று ஐங்குறுநூறு விளக்கிக் கூறும்

இதிலிருந்து சங்க இலக்கியத்தின் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் எழுந்த காலத்திலிருந்து சிவபெருமானுக்கென்று பல்வேறு திருவுருவ அமைப்புக்கள் அமைக்கப் பெற்று சிறப்புற்று இருந்தன என்று தெள்ளிதின் உணரலாம்.

உ

*சிவ சிவ*

**சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி**
**அவாயம் அறவே அடிமைய தாக்கிச்**
**சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை**
**அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.**

# மூன்றும் திருமுறையின்
## முதற்பாடல்கள் — உரை

திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்

92. திருநெல்வேலி பண்: சாதாரி

மருந்தவை மந்திரம் மறுமைநன் னெறியவை
மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடும் அவர் நாமமே சிந்தைசெய்
நன்னெஞ்சமே
பொருந்துதண் புறவினிற் கொன்றைபொன் சொரிதரத்
துன்றுபைம்பூம்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்வே லியுறை
செல்வர்தாமே.

பொழிப்பு: மருந்தென்று சொல்லப்படுபவையும் மந்திரம் மறுமையின்பம் நன்னெறி என்று சொல்லப்படுபவையும் மற்றுமுள்ள எல்லாப் பொருள்களும்-தண்பொருநைக்கரையிலுள்ள சோலைகளில் கொன்றைமரம் பொன்மலர்களைச் சிந்த (அதைக்கண்டு) நெருங்கிய செழித்த அழகிய செருந்தி மரங்களும் செம்பொன் மலர்களைப் பூக்கின்ற திருநெல்வேலி என்ற தலத்தில் தங்கியுள்ள செல்வரே ஆவார். எனவே நல்ல நெஞ்சமே! அவருடைய திருநாமத்தையே எப்போதும் நினைத்துக்கொண்டிருப்பாயாக. அங்ஙனம் நினைத்தால் நீங்குதற்கரிய துயரமும் நீங்கும்.

மருந்து–உடற்பிணி நீக்கும் கருவி; மந்திரம்–விஷக்கடிகளை நீக்கும் கருவி; மறுமை–மறுபிறவிகளில் பெறும் இன்பம்; நன்னெறி-வீடுபேறு. நாமம்-திருப்பெயர்; திருவைந்தெழுத்துமாம். பொருந்து-பொருநையாறு. பொருந்துதண் என்பதைத் தண் பொருந்து என மாறுக. அஃதாவது தண் பொருந்தம், தண் பொருநையாறு என்பதாம். புறவு-சோலை; துன்று-நெருங்கு; பைம்பூம் செருந்தி-இலைகளால் செழித்துப் பச்சென்று அழகிதான செருந்திமரம், மருந்து முதலாயின வெல்லாம் நமக்குத் திருநெல்வேலி யுறைசெல்வரே ஆம், எனவே நெஞ்சமே அவர் நாமமே சிந்தைசெய், துயர் கெடும் என முடிக்க. இப்பதிகத்தைப் பாடி ஆடினால் அருவினை கெடும்.

———

(தொடரும்)

## திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் திருமுறை வெளியீடுகள்

| | | ரூ. | பை |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) ... | 2 | 50 |
| 2 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த காசிக்கலம்பகம் மூலமும் அரும்பதக்குறிப்பும் ... | 0 | 40 |
| 3 | ,, சிதம்பர மும்மணிக்கோவை ,, ... | 0 | 20 |
| 4 | ,, மதுரைக்கலம்பகம் ,, ... | 0 | 40 |
| 5 | ,, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ,, ... | 0 | 60 |
| 6 | திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா-மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்-மதுரைக்கலம்பகம்-நீதிநெறி விளக்கம்-மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை மதுரை மீனாட்சியம்மை குறம் ... | 2 | 70 |
| 7 | திருவாரூர் நான்மணிமாலை-முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ... | 1 | 25 |
| 8 | திருவாரூர் நான்மணிமாலை உரையுடன் ... | 0 | 50 |
| 9 | சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ... | 1 | 00 |
| 10 | பண்டார மும்மணிக்கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை ... | 1 | 00 |
| 11 | நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும், ஹிந்தியும் ... | 0 | 50 |
| 12 | ,, மூலம் ... | 0 | 10 |
| 13 | நீதிநெறி விளக்கமும் நன்னெறியும்–மூலம் ... | 0 | 15 |
| 14 | கந்தர்கலிவெண்பா மூலம் மட்டும் ... | 0 | 10 |
| 15 | கந்தர் கலிவெண்பா (புதிய பதிப்பு) ... | 0 | 05 |
| 16 | அபிராமியந்தாதி மூலம் ... | 0 | 15 |
| 17 | திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ... | 5 | 25 |
| 18 | திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ... | 3 | 75 |
| 19 | சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ... | 2 | 75 |
| 20 | திருவாசகம் மூலம் (அச்சில்) | | |
| 21 | திருக்கோவையார் (பேராசிரியருரையும்பழையவுரையும்) ... | 4 | 50 |
| 22 | 9-ம் திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு மூலம் ... | 0 | 56 |
| 23 | ,, ,, தெளிவுரை ... | 3 | 25 |
| 24 | பெரிய புராணம் (மூலம்) புதிய பதிப்பு ... | 6 | 75 |
| 25 | பதினோராந் திருமுறை (புதிய பதிப்பு) ... | 3 | 50 |
| 26 | பேராயிரப் பனுவல்கள் ... | 0 | 10 |
| 27 | திருத்தொண்டர் புராணசாரம் ... | 0 | 40 |
| 28 | அம்மையார் அற்புதத் திருவந்தாதி ... | 0 | 25 |
| 29 | திருக்கைலாய ஞானவுலா-உரையுடன் ... | 0 | 50 |
| 30 | திருக்கயிலைத் திருமுறை ... | 0 | 37 |
| 31 | பழமொழித் திருமுறை ... | 0 | 25 |
| 32 | அப்பர் விழா வெளியீடு ... | 0 | 25 |
| 33 | Hymns and Proverbs ... | 0 | 35 |
| 34 | திருவாரூர்-திருப்பனுவல்கள் ... | 0 | 11 |

Registered With the Registrar of Newspapers for India
Under No. R. No. 1485/57.

Regd No. M. 5574 குமரகுருபரன்

| | | | |
|---|---|---|---|
| 35 | குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத் திரட்டும் | ... 0 | 30 |
| 36 | கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்) | ... 1 | 75 |
| 37 | திருவாசகம் தேனும் கனியும் | ... 0 | 15 |
| 38 | தேவாரம் பாடும்பயன் | ... 0 | 15 |
| 39 | காசிக்கலம்பகம் உரைநடை | ... 0 | 15 |
| 40 | தாழைத் திருமுறை | ... 0 | 15 |
| 41 | ஐந்து நீதி நூல்கள் | ... 0 | 10 |
| 42 | நவக்கிரகமாண்பு | ... 0 | 25 |
| 43 | ஸ்ரீ சைலம் | ... 0 | 10 |
| 44 | திருவுசாத்தனக் கல்லெழுத்துக்கள் | ... 0 | 37 |
| 45 | திருவெம்பாவை–திருப்பள்ளியெழுச்சி | ... 0 | 10 |
| 46 | செந்திலாண்டவன் மகிமை | ... 0 | 15 |
| 47 | திருக்குறள்–உரைக்கொத்து-அறத்துப்பால் (4–ம் பதிப்பு) | ... 2 | 00 |
| 48 | திருமுருகாற்றுப்படை | ... 0 | 15 |
| 49 | தேவார வைப்புத்தல விளக்கம் | ... 0 | 15 |
| 50 | திருக்குறள் மணக்குடவர் உரை (முப்பாலும் சேர்ந்தது) | ... 2 | 00 |
| 51 | திருக்குறள் | ... 0 | 35 |
| 52 | திருக்குறள்-அறத்துப்பால்–சிற்றுரை | ... 0 | 20 |
| 53 | திருக்குறள்-பொருட்பால்–பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம் | ... 0 | 15 |
| 54 | முதுமொழிமேல்வைப்பு (குறிப்புரை) | .. 0 | 60 |
| 55 | திருக்குறள் அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழிபெயர்ப்பும் | ... 1 | 50 |
| 56 | திருக்குறள்-பொருட்பால் | ... 2 | 50 |
| 57 | திருக்குறள்-காமத்துப்பால் ஷெ 53, 54, 55, திருக்குறள் 2 புத்தகமும் | ... 4 | 00 |
| 58 | கந்தர்கலிவெண்பா சகலகலாவல்லிமாலை ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புடன் | ... 1 | 25 |
| 59 | திருவருட்பயன் மூலம் இந்தி, ஆங்கிலமொழிபெயர்ப்புடன் | ... 1 | ’0 |
| 60 | சிவகொழுந்து தேசிகர் பிரபந்தம் | ... 3 | 00 |
| 61 | அகத்தியர் தேவாரத்திரட்டு (புதிய பதிப்பு) | ... 0 | 50 |
| 62 | மங்கலம் | ... 0 | 20 |
| 63 | திருஆணைத் திருமுறையும் உருத்திராக்க விதானமும் | ... 0 | 20 |
| 64 | கோதனத் திருமுறை | ... 0 | 16 |
| 65 | தோடுடைய செவியன் கோவண ஆடையன் | ... 0 | 15 |
| 66 | பண்டார மும்மணிக்கோவை உரைநடை | ... 0 | 15 |
| 67 | மகேசுவ[illegible]ச | ... 0 | 15 |
| 68 | திரும[illegible] (அச்சில்) | | |
| 69 | தி[illegible]தேனும் கனியும் | ... 0 | 10 |

[illegible]ல கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ [illegible]பர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்,
2. "தி[illegible] விலாசம்" 53. பிள்ளையார் கோவில்தெரு,
திரு[illegible]டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி. சென்னை-600005.

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம். 628601